# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*2005, செத்தெம்பர் மாதம் 23 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை: ரூபா 44.50** **தபாற் செலவு: ரூபா 12.50**

## *2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டம்*

[*2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ—ஓ. 39/2004*
*4845*

**கொடுப்பனவு, கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் ; மத்திய வங்கியின் புத்தகங்களின்மீதான பிணையங்களைக் கையுதிர்ப்பதற்கும் ; பணச்சேவைகளை வழங்குவோரை ஒழுங்குபடுத்துவதற்கும் ; காசோலைகளை இலத்திரன் முறையில் முன்வைப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1**. *இச்சட்டம், 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப் படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடிய வாறான (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

### பாகம் I

### பொது ஏற்பாடுகள்

*சட்டத்தின் குறிக்கோள்கள்.*

**2**. *(1) சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண் டும் :—*

*(அ) கொடுப்பனவு, கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், மேற்பார்வை செய்வதற்கும், கண்காணிப்பதற்கும் ஏற்பாடு செய்தல் ;*

*(ஆ) மத்திய வங்கியில் பேணப்படும் பிணையக் கணக்கு களில் பிணையங்களைக் கையுதிர்ப்பதற்கு ஏற்பாடு செய்தல் ;*

(இ) பணச் சேவைகளை வழங்குவோரை ஒழுங்குபடுத்துவதற்கும், மேற்பார்வை செய்வதற்கும், கண்காணிப்பதற்கும் ஏற்பாடு செய்தல் ; அத்துடன்

(ஈ) காசோலைகளின் இலத்திரன்முறை முன்வைப்பை வசதிப்படுத்துதல்.

(2) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளில் குறிப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட வரைவிலக்கணங்களுக்கமையவும், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழியவும் —

"கணக்குத் தீர்வு முறைமை" என்பது, கொடுப்பனவு செய்வதற்கான கடப்பாடுகளைப் பரிமாற்றுவதற்கும் செயல்முறைப் படுத்துவதற்கும் அல்லது அவற்றைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக வங்கிகளுக்கும் ஏனைய நிதிநிறுவனங்களுக்குமிடையே பிணையங்களைக் கைமாற்றுவதற்குமான பொறிமுறையொன்று என்று பொருளாகும் ;

"பணச்சேவைகள்" என்பது, பாதுகாப்பாக வைத்திருத்தல், பணம் அனுப்புதல், காசோலை மீது பணம்பெறுதல் மற்றும் நாணயப் பரிமாற்றம் என்பன உட்பட, பணம் தொடர்பான சேவைகள் என்று பொருளாகும் ;

"கொடுப்பனவு முறைமை" என்பது, பணத்திலான கொடுப்பனவையும் கொடுப்பனவுக் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் பணப்பெறுமதியைக் கைமாற்றுதலையும் வசதிப்படுத்துகின்ற நிறுவனங்களும் பொறிமுறைகளும் என்று பொருளாகும். கொடுப்பனவு செய்வதற்கான கடப்பாடுகளின் கணக்குத் தீர்வுக்கும் கொடுத்துத் தீர்த்தலுக்குமான பொறிமுறைகளை அது உள்ளடக்கும்;

"காசோலைகளின் இலத்திரன் முறை முன்வைப்பு" என்பது, காசோலையொன்று எந்த வங்கியாளர் பெயரில் வரையப்படுகின்றதோ அந்த வங்கியாளருக்கு காசோலையின் தோற்றம் ஒன்றும் கொடுப்பனவுத் தகவலும் வங்கியாளரொருவரினால் இலத்திரன் முறையில் அனுப்பப்படுதல் என்று பொருளாகும் ;

"கொடுத்துத்தீர்த்தல் முறைமை" என்பது, கொடுப்பனவு செய்வதற்கும், வங்கிகளினதும் ஏனைய நிதி நிறுவனங்களினதும் கணக்குகளுக்கான சரிக்கட்டுதல்கள் மூலம் அவற்றினாற் கணக்குத்தீர்வு செய்யப்பட்ட பிணையங்களைக் கைமாற்றுவதற்குமான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கானவொரு பொறிமுறை என்று பொருளாகும்.

"புத்தகங்கள் பதிவேடுகள், கணக்குகள், ஆவணங்கள் அல்லது தகவல்" என்பன செய்தித் தாளுட்பட ஏதேனும் ஊடகத்தில் பதியப்பட்ட அல்லது களஞ்சியப்படுத்தப்பட்ட எவையேனும் புத்தகங்கள், பதிவேடுகள், கணக்குகள், ஆவணங்கள் அல்லது தகவல் என்றும் இலத்திரன் முறை மூலம் கட்புலம்மூலம், காந்தம்மூலம் அல்லது ஏதேனும் தகவல்முறைமையில் களஞ்சியப்படுத்தப்பட்ட செய்தியும் தரவும் என்றும் பொருளாகும்.

*ஒழுங்குபடுத்தற் திட்டங்கள் ஏனைய திட்டங்களுக்கு மேலதிக மானவையாக இருத்தலும், இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கிக்குள்ள தத்துவங்கள், என்பனவும்.*

**3.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உருவாக்கப்படும் கடப்பாடுகளும், தேவைப்பாடுகளும், தத்துவங்களும், ஒழுங்குபடுத்தற் திட்டங்களும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழான கடப்பாடுகளுக்கும், தேவைப்பாடுகளுக்கும், தத்துவங்களுக்கும், ஒழுங்குபடுத்தற் திட்டங்களுக்கும் மேலதிகமானவையாக இருத்தல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தினால் மத்திய வங்கிக்கு அளிக்கப்படும் தத்துவங்கள், (422 அத்தியாயமான) பணச் சட்டத்தினால், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தினால் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் அதற்களிக்கப் படுகின்றவற்றுக்கு மேலதிகமானவையாக இருத்தலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்துக்கும் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்துக்கும் இசைந்தொழுக வாசிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக "மத்திய வங்கி" என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்.

(4) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி, மத்திய வங்கியினால் பிரயோகிக்கப்படவேண்டுமென, புரியப் படவேண்டுமென அல்லது நிறைவேற்றப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுமிடத்து அல்லது அதிகாரமளிக்கப்படு

மிடத்து, இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை, அத்தகைய தத்துவங்களை, கடமைகளை அல்லது பணியைப் பிரயோகிப் பதற்கும், புரிவதற்கும் அல்லது நிறைவேற்றுவதற்கும் மத்திய வங்கியின் எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் அதிகாரமளிக்க லாம்.

## பாகம் II

## கொடுப்பனவு, கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகளும் பணச் சேவைகளும்

### அத்தியாயம் I

### தேசிய கொடுப்பனவு முறைமை

*கொடுப்பனவு, கணக்குத் தீர்வு மற்றும் கொடுத்தீர்த்தல் முறைமைகள் தொடர்பாக மத்திய வங்கிக்குள்ள பொறுப்பு.*

**4.** (1) மத்திய வங்கியானது, தேசியக் கொடுப்பனவு முறைமையொன்றுக்கானவொரு திட்டத்தைத் தயாரிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியாதல் வேண்டும். இலங்கையில் கொடுப்பனவு, கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகளைத் தாபிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான வழிகாட்டுதலையும், தலைமைத்துவத்தையும் வழங்கும் பொறுப்பும் மத்திய வங்கியின் மீது சுமத்தப்படுதல் வேண்டும்.

(2) மத்திய வங்கியானது பின்வருவனவற்றை வசதிப்படுத்துதல் வேண்டும் :—

(அ) அதன் கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகளும் தொடர்புபட்ட ஒழுங்கேற்பாடுகளும், கொடுப்பனவுகளை அல்லது பிணையங்களைப் பரிமாற்றுதலுடன், கணக்குத்தீர்வு செய்வதுடன் அல் லது கொடுத்துத்தீர்த்தலுடன் சம்பந்தப்பட்ட ஏனைய முறைமைகளுடன் அல்லது ஒழுங்கேற்பாடுகளுடன் கொண்டுள்ள செயலீடுபாடு ;

(ஆ) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நாணயங்களிலான கொடுப்பனவுகளுக்கும் பிணையங்களைக் கைமாற்று வதற்குமான புதிய முறைகளையும் தொழினுட்பவியல் களையும் அபிவிருத்தி செய்தல் ; அத்துடன்

(இ) கொடுப்பனவு முறைமைகளின் படிமுறைவளர்ச்சியி லும் கொடுப்பனவுச் சேவைகளை வழங்குவதிலும் எல்லாப் பங்குபற்றுநர்களுக்குமிடையேயான ஒத்து ழைப்பு.

(3) மத்திய வங்கியானது, இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும்,—

(அ) அதன் சொந்தக் கணக்கின் பேரிலும் அதன் வாடிக்கையாளர்களுக்காகவும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நாணயங்களில் பிணையங்களைக் கைமாற்றுவதற்காகக் கொடுப்பனவுக் கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் அனுப்புதலும், செயல்முறைப்படுத்துதலும், பெறுதலும் என்பன தொடர்பாக ஏதேனும் வங்கியினால், வேறேதேனும் நிதி நிறுவனத்தினால் அல்லது ஆளினால் வழங்கப்படும் சேவைகளையும் வசதிகளையும் ஒழுங்குபடுத்தலாம் மற்றும் மேற்பார்வை செய்யலாம் என்பதுடன், அத்தகைய சேவைகளையும் வசதிகளையும் தாபிப்பதிலும், தொழிற்படுத்துவதிலும், ஒழுங்குபடுத்துவதிலும் ஏதேனும் வங்கிக்கு அல்லது வேறு நிதிநிறுவனத்துக்கு உதவியுமளிக்கலாம் ;

(ஆ) (i) கொடுப்பனவுகளைக் கணக்குத்தீர்வு செய்து கொடுத்துத் தீர்ப்பதற்கான ஏதேனும் முறைமையையும், உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நாணயங்களில் கொடுப்பனவுகளைச் செய்வதற்கான அல்லது பரிமாற்றுவதற்கான ஏனைய ஒழுங்கேற்பாடுகளையும் ;

(ii) பிணையங்களைக் கணக்குத்தீர்வு செய்து கொடுத்துத் தீர்ப்பதற்கான ஏதேனும் முறைமையையும் பிணையங்களைப் பரிமாற்றுவதற்கான ஏனைய ஒழுங்கேற்பாடுகளையும் ; அத்துடன்

(iii) வேறொரு நாணயத்திலான ஏனைய கொடுப்பனவுகளுக்கு அல்லது பிணையங்களுக்கு எதிராக ஏதேனும் நாணயத்தில் கொடுப்பனவுகளைச் செய்வதற்கான அல்லது பரிமாற்றுவதற்கான அல்லது பிணையங்களைப் பரிமாற்றுவதற்கான ஏனைய ஒழுங்கேற்பாடுகள் உட்பட, கணக்குத் தீர்வு செய்தலையும் கொடுத்துத் தீர்த்தலையும் வசதிப்படுத்துவதற்கான எவையேனும் முறைமைகளையும்,

தாபிக்கலாம், தொழிற்படுத்தலாம், ஒழுங்குபடுத்தலாம், மேம்படுத்தலாம், அவற்றில் பங்குபற்றலாம் அல்லது அவை தாபிக்கப்படுவதில், தொழிற்படுத்தப்படுவதில், ஒழுங்குபடுத்தப் படுவதில் மற்றும் மேம்படுத்தப்படுவதில் உதவியளிக்கலாம், அத்துடன் அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்யலாம்.

கொடுப்பனவு முறைமைக் கொள்கை.

**5.** (1) மத்திய வங்கியானது, இலங்கைக்கான கொடுப்பனவு முறைமைக் கொள்கையொன்றைச் செயற்படுத்துவதனை வகுத்த மைப்பதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும், கண்காணிப்பதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும். அத்தகைய கொள்கை பகிரங்க மானதாக்கப்படுதல் வேண்டும்.

(2) மத்திய வங்கியானது, (1) ஆம் உட்பிரிவின் கீழான அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதில், மிகச் சிறந்த சர்வதேச நியமங் களினால் வழிகாட்டப்படுதல் வேண்டும். மத்திய வங்கியின் கொடுப்பனவு முறைமைக் கொள்கையானது, முதற்கண்ணாக, நிதிமுறைமையின் முழுமொத்த நிலையுறுதியை வசதிப்படுத்து வதனையும், கொடுப்பனவு முறைமையின் பாதுகாப்பையும் திறமையையும் மேம்படுத்துவதனையும், அபாயத்தைக் கட்டுப் படுத்துவதனையும் நோக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். முதற்கண்ணாகவுள்ள இந்தக் குறிக்கோளுக்கமைய, கொள்கை யானது, பொதுமக்கள் அக்கறையின் ஏனைய அம்சங்களை அதிகரிப்பதனையும், குறிப்பாக, கொடுப்பனவுச் சேவைகளுக் காகச் சந்தையில் போட்டாபோட்டியை மேம்படுத்துவதற்கும், அத்துடன் கொடுப்ப னவு முறைமையைப் பயன்படுத்துவோரைப் பாதுகாப்பதற்கும் உதவுவதனையும் நோக்காகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது, கொடுப்பனவு முறைமையின் பாது காப்பையும் திறமையையும் மேம்படுத்துவதில், ஏனைய நாடுகளிலுள்ள மத்திய வங்கிகளுடனும் இயைபான வேறு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அதிகாரிகளுடனும் ஒத்துழைத்தல் வேண்டும்.

## அத்தியாயம் II

### பிணையக் கணக்குகள்

பிணையக் கணக்குகளும் பிணையக் கணக்கு வைத்திருப் போரும்.

**6.** (1) மத்திய வங்கியானது, ஒவ்வொரு நேரடிப் பங்குபற்று நருக்காகவும் வணிகர் நேரடிப் பங்குபற்றுநரொருவரின் வாடிக்கை யாளர் ஒவ்வொருவருக்காகவும் பிணையக் கணக்குகளைப் பேணு தல் வேண்டும். ஆளொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பிணையக் கணக்குகளை வைத்திருக்கலாம். பிணையக் கணக்கொன்று பெயர் குறிக்கப்பட்ட பிணையக் கணக்கொன்றாக இருக்கலாம்.

(2) பிணையக் கணக்கு வைத்திருப்பவர் ஒருவர், ஏற்புடையற் பாலதான ஏதேனும் எதிர்க்கோரிக்கைக்கமைய, அவரது அல்லது அவளது பிணையக் கணக்குக்கு, அல்லது பெயர் குறிக்கப்பட்ட பிணையக் கணக்குக்கு வரவு வைக்கப்பட்ட பிணையத்தில் அடங்கி யுள்ள எல்லா உரிமைகளையும் பிரயோகிக்கலாம் ;

ஆயின், எவ்வாறாயினும், வாடிக்கையாளர் பிணையக் கணக்கு வைத்திருப்பவர் ஒருவர், இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட வாறாக அவரது அல்லது அவளது பிணையக் கணக்கை, அவ்வாடிக்கையாளரின் பிணையக் கணக்கில் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் மூலமாக மட்டுமே கையாளலாம் :

ஆயின், மேலும், இப்பிரிவின் கீழான உரிமைகளைப் பிர யோகித்தலானது ஓர் ஒப்பந்தத்தை மீறுவதாக அல்லது வேறு வகையில் வேறெவரேனுமாளின் உரிமைகளுக்கு முரணாக உள்ள விடத்து, கணக்கு வைத்திருப்பவருக்கெதிரான பரிகாரமெதுவும் பங்கப்படுத்தப்பட மாட்டாது.

(3) ஒரு பிணையக் கணக்குத் தொடர்பான எல்லாக் கடிதத் தொடர்புகளும் கொடுப்பனவுகளும், புறநீங்கலாக —

(அ) சொந்தப் பிணையக் கணக்குகள் தொடர்பில், நேரடிப் பங்குபற்றுநர்களினால் அல்லது அவர்களுக்கு ; அத்து டன்

(ஆ) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்களின் சொந்தக் கணக்கு தொடர்பிலும், அவர்களின் வாடிக்கையாளர்களின்

எந்தப் பிணையக் கணக்குகளில் செயலாற்றுவதற்கு அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்தப் பிணையக் கணக்குகள் தொடர்பிலும் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்களினால் அல்லது அவர்களுக்கு,

மத்திய வங்கிக்கு அல்லது மத்திய வங்கியினால் சமர்ப்பிக்கப் படுதல் அல்லது செய்யப்படுதல் வேண்டும். ஒவ்வோரு கையுதிர்ப் பும் பிணையத்தைக் கைமாற்றுபவரினதும் கைமாற்றம் பெறுபவரி னதும் பிணையக் கணக்குகளில் நேரடியாகப் பதியப்படுதல் வேண்டும், அது, கைமாற்றுபவராக அல்லது கைமாற்றம்பெறு பவராக உள்ள வாடிக்கையாளரொருவரின் சார்பில் செயலாற்று வதற்கு அதிகாரமளிக்கப்படும் வணிகர் நேரடிப் பங்குபற்று நரொருவரின் சொந்தக் கணக்கினூடாகச் செல்லுதலாகாது.

(4) இப்பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடுகள், முறையே (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தினதும் (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒத்திருக்கும் வகையில் வாசிக்கப்படுதல் வேண் டும். அத்தகைய கட்டளைச் சட்டங்களில் அடங்கியுள்ள ஏற்பாடு கள், ஒவ்வாமையொன்று ஏற் படும் பட்சத்தில் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பிணையங்களைக் கையுதிர்த்தல்.

**7.** (1) ஒரு பிணையத்தின் கையுதிர்ப்பானது, கைமாற்று பவரினதும் கைமாற்றம் பெறுபவரினதும் அந்தந்தப் பிணையக் கணக்குக்குப் பதியப்பட்ட பற்று, வரவு என்ற வழிவகைகள் மூலம் நிறைவேற்றப்படும்.

(2) கையுதிர்ப்பொன்றின்மேல், கைமாற்றம் பெறுபவர், கைமாற் றுபவருக்கிருந்த அல்லது கைமாற்றுவதற்கு அவர் தத்துவம் கொண்டிருந்த பிணையத்தில் கைமாற்றப்படும் அக்கறையின் அளவுக்கு உரிமைகளைக் கொள்ளுகின்றார். கொள்ளப்பட்ட அக்கறைக்கான வரவு, கைமாற்றம் பெறுபவரின் பிணையாகக் கணக்குக்குப் பதியப்பட்டவிடத்தும், கைமாற்றம் பெறுபவர், ஏதேனும் எதிர்க்கோரிக்கை பற்றிய அறிவித்தலின்றி பெறுமதி கொடுத்துள்ளவிடத்தும், கைமாற்றம் பெறுபவர், எவையேனும் எதிர்கோரிக்கைகள் இன்றி, பிணைத்தில் கைமாற்றம் பெறுப வருக்குள்ள அக்கறையையும் கொள்ளுகின்றார். இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக —

(அ) கைமாற்றம் பெறுபவராகவுள்ள வாடிக்கையாளரின் பிணையக் கணக்கில் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்படும் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் பற்றிய அறிவித்தல், வாடிக்கையாளருக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதாகாது ; அத்துடன்

(ஆ) கைமாற்றுபவர், நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவராக, முகவர் ஒருவராக, அல்லது ஒரு பிரதிநிதித்துவத் தன்மையில் செயலாற்றுகின்றார் அல்லது கைமாற்றமானது பெயர் குறிக்கப்பட்ட பிணையக் கணக்கொன்றிலிருந்து செய்யப்பட்டது என்பது பற்றிய அறிவித்தல் மட்டும், நம்பிக்கை அல்லது அதிகார மீறுகை பற்றிய அறிவித்தல் அல்ல என்பதுடன், எதிர்க்கோரிக்கையொன்று பற்றிய அறிவித்தலாக அமைகின்றதும் அல்ல.

(3) ஒரு வாடிக்கையாளரின் அதிகாரத்தின்கீழ் பிணையமொன்றைக் கையாளும் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர், அந்த வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் —

(அ) எதிர்க்கோரிக்கையாளரின் உரிமைகளை மீறிய எவரேனுமாளுடன் கூட்டுச் சூழ்ச்சியாகச் செயலாற்றியிருந்தாலொழியவும் அல்லது

(ஆ) அவ்வாறு கையாளுவதற்கெதிராக வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின்மீது விடயத்துக்கேற்ப தடை விதிக்கின்றதும், தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்டதுமான தடையாணை, தடையுத்தரவுக் கட்டளை அல்லது வேறு கடன்கொடுநரின் செயற்பாடு ஒன்று சேர்ப்பிக்கப்பட்டபின்னர் செயலாற்றியிருந்தாலொழியவும், அத்தடையாணை, அத்தடையுத்தரவு, கட்டளை அல்லது வேறு கடனிறுப்புச் செயற்பாடு என்பனமீது செயலாற்றுவதற்கான சந்தர்ப்பமொன்றை வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் உடையவராகவிருந்தாலொழியவும்,

பிணையத்துக்கான எதிர்க்கோரிக்கையொன்றையுடைய ஆளொருவருக்கு வகைசொல்லவேண்டியவரல்லர்.

(4) மத்திய வங்கியானது, பிணையங்களின் யைுதிர்ப்பொன்றைக் கையாள்வதிலும், பிணையக் கணக்குகளில் அதனைப் பதியச் செய்தலிலும், மத்திய வங்கிக்குச் சட்டமுறையாகச் சேர்ப்பிக்கப் பட்டதாக தகுதிவாய்ந்த நியாயாதிக்கம்கொண்ட நீதிமன்ற மொன்றினால் வழங்கப்பட்ட, பிணிக்கின்றதும் பயனுள்ளதுமான ஒரு தடையாணை தடையுத்தரவுக்கு, கட்டளைக்கு அல்லது வேறு கடன்கொடுநரின் செயற்பாட்டுக்கு முரணாக மத்தியவங்கி செயலாற்றினாலொழிய அல்லது மத்திய வங்கி தீய எண்ணத்து டன் அல்லது எவரேனும் தவறு இழைப்பவரின் கூட்டுச் சூழ்ச்சி யுடன் செயலாற்றினாலொழிய, நேரடிப் பங்குபற்றுநர், வாடிக்கை யாளர், எதிர்க்கோரிக்கையாளர் அல்லது மூன்றாம் திறத்தவர் ஒருவர் உட்பட, எவரேனுமாளுக்கு எத்தகையதுமான ஏதேனும் வகையில் வகைசொல்லப் பொறுப்பாதலாகாது.

கடன் கொடுநரின் செயற்பாடு.

**8.** (1) ஒரு பிணையக் கணக்கு வரவுவைக்கப்படும் பிணைய மொன்று, பிணையக் கணக்கு வைத்திருப்பவரின் அக்கறையினது அளவுவரைமட்டும், அத்துடன் பிணையக் கணக்கு வைத்திருப்ப வரின் கடனொன்றைத் திருப்தி செய்வதற்கான ஏதேனும் எதிர்க்கோரிக்கைக்கமையவும், பிணையக் கணக்கு வதை்திருப்ப வரின் கடன்கொடுநரொருவரினால் அல்லது அவரின் நன்மைக் கான கடன் கொடுநரின் செயற்பாட்டுக்கு அல்லது கடனிறுக்க வகையறவு வழக்கு நடவடிக்கைகளுக்கு அமைந்ததாக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி, ஒரு வாடிக்கையாளரினால் வைத்திருக்கப்படும் பிணைக் கணக்குக்கு வரவு வைக்கப்படும் பிணையமொன்று வாடிக்கையாளரின் பிணையக் கணக்கில் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்படும் வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின் கடன்கொடுநரொருவரினா லான அல்லது அவரின் நன்மைக்கான கடன்கொடுநரின் செயற்பாட்டுக்கு அல்லது கடனிறுக்கவகையற்ற வழக்கு நடவடிக் கைகளுக்கு, அந்த வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின் ஏதேனும் கடனைத் திருப்திப்படுத்துவதற்கென, அமைந்ததாகவிராததிருக்க லாம்.

(3) ஒரு பிணையத்தில் கடனாளியொருவருக்குள்ள அக்கறை, மத்திய வங்கியின்மீது உரியமுறையில் சேர்ப்பிக்கப்படும் கடன் கொடுநரின் செயற்பாட்டின்மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ளப் படலாம். மத்திய வங்கியானது, அதன்மீது உரியமுறையில் சேர்ப்பிக்கப்படும் ஏதேனும் கடன்கொடுநரின் செயற்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

வணிகரின் சோந்தை.

**9.** வாடிக்கையாளரொருவரின் பிணையக்கணக்கில் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்படும் வணிகர் நேரடிப் பங்குபற்றுநரினால் வாடிக்கையாளருக்கு விற்பனை செய்யப்பட்டதாக வாடிக்கையாளரின் பிணையக் கணக்கில் வைத்திருக்கப்படும் பிணையொன்று அதன் விலையானது கொடுப்பனவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின் சார்பிலான சோந்தையொன்றுக்கு அமைந்ததாகவுள்ளது.

IIஆம் அத்தியாயத்துக்கான பொருள்கோடல்.

**10.** (1) இவ்வத்தியாயத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய —

"எதிர்க்கோரிக்கை" என்பது, ஈடு, அடைமானம் அல்லது பொறுப்பு ஒன்றின்கீழான கடனொன்றை மீட்பதற்கான உரிமையும் அல்லது கடனொன்று கொடுப்பனவு செய்யப்படுவதனையும் ஒரு நம்பிக்கைப்பொறுப்பின்கீழான நன்மையீட்டும் அக்கறையொன்றையும் உறுதிப்படுத்துவதற்கு உட்கருதப்பட்ட வேறேதேனும் கொடுக்கல் வாங்கல் உட்பட, கோரிக்கையாளரின் உரிமை அல்லாத ஆளொருவரின் பிணையக் கணக்குக்கு வரவு வைக்கப்பட்ட பிணையமொன்றிலான ஆதன அக்கறையொன்றுக்கானவொரு கோரிக்கை என்று பொருளாகும்;

"கடன்கொடுநரின் செயற்பாடு" என்பது, ஒரு கையுதிர்ப்பைத் தடுக்கும் அல்லது தடைசெய்யும் ஏதேனும் கட்டளையுட்பட, ஓர் அறவீடு, பற்றுச் செய்தல், தடைசெய் அறிக்கை, சோந்தை பற்றிய அறிவித்தல், நடுக்கட்டல் அல்லது இவற்றையொத்த செயல் முறைபோன்று, ஒரு பிணைய அல்லது பிணையங்கள் கணக்குத் தொடர்பில் கடன்கொடுநர் அல்லது வேறு கோரிக்கையாளர் ஒருவர் சார்பில் தகுதி வாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றமொன்றினால் வழங்கப்படும் ஏதேனும் நிறைவேற்றுச் செயல்முறை என்று பொருளாகும் ஆனால் பெயர்குறிக்கப்பட்ட பிணையக் கணக்கொன்றுக்கு வரவு வைக்கப்பட்ட பிணையமொன்றுக்கான எதிர்க்கோரிக்கையை ஒழிப்ப தற்கு அப்பெயர் குறிக்கப்பட்ட பிணையக் கணக்கின் பிணையக் கணக்கு வைத்திருப்பவரினால் எடுக்கப்படும் ஏதேனும் நடவடிக்கையை உள்ளடக்குதலாகாது ;

"வாடிக்கையாளர்" என்பது, வணிகர் நேரடிப்பங்குபற்றுநரொருவர் தொடர்பாக, நேரடிப் பங்குபற்றுநரல்லாத, பிணையக் கணக்கு வைத்திருப்பவராகவுள்ள, ஒரு கையுதிர்ப்பிலான கைமாற்றுபவர் அல்லது கைமாற்றம் பெறுபவர் என்று பொருளாகும் ;

"வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்", "நேரடிப் பங்குபற்றுநர்" என்பன, (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்திலும் (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்திலும் அவற்றுக்குக் குறித்தளிக்கப்படுகின்றவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"பெயர் குறிக்கப்பட்ட பிணையக்கணக்கு" என்பது, எந்தப் பிணையக் கணக்கில் வைத்திருக்கப்படும் பிணையங்களுக்கான உரித்து எதிர்க்கோரிக்கைகளுக்கு அமைந்ததாகவுள்ளதெனக் கூறப்படுகின்றதோ அந்தப் பிணையக் கணக்கொன்று என்று பொருளாகும் ;

"கையுதிர்ப்பு" என்பது, ஒரு கைமாற்றுபவருக்கும் கைமாற்றம் பெறுபவருக்குமிடையேயான பிணையமொன்றுக்கு உரித்தின் முழுமையான ஏதேனும் கைமாற்றம் என்று பொருளாகும் ;

"சொந்தப் பிணையக் கணக்கு" என்பது, பிணையக் கணக்கு வைத்திருப்பவராக நேரடிப் பங்குபற்றுநரொருவரின் பெயரிலான பிணையக் கணக்கொன்று என்று பொருளாகும் ;

"பிணையக் கணக்கு" என்பது, மத்திய வங்கியில் எக்கணக்கிற்குப் பிணையங்கள் வரவுவைக்கப்பட்டு பற்றுவைக்கப்படுகின்றனவோ அத்துடன் எக்கணக்கில் பிணையங்கள் பற்றிய கையுதிர்ப்புகள் பதியப்படுகின்றனவோ, மத்திய வங்கியில் பேணப்படும் அக்கணக்கொன்று என்று பொருளாகும் ;

"பிணையக் கணக்கு வைத்திருப்பவர்" என்பது, எவ்வாளின் பெயரில் மத்திய வங்கியானது பிணையக் கணக்கொன்றைப் பேணுகின்றதோ அவ்வாள் ஒருவர் என்று பொருளாகும்.

"பிணையம்" என்பது –

(அ) (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக் கிணங்க எழுத்திலில்லாத படிவத்தில் வழங்கப்படும் திறைசேரி உண்டியல்கள் ;

(ஆ) (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க எழுத்திலில்லாத படிவத்தில் வழங்கப்படும் திறைசேரி முறிகள் ;

(இ) (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் ஏற்பாடுக ளுக்கிணங்க மத்திய வங்கியினால் எழுத்திலில்லாத படிவத்தில் வழங்கப்படும் பிணையங்கள் ;

"கைமாற்றம் பெறுபவர்" என்பது, கையுதிர்ப்புக்கான எந்தத் திறத்தவருக்குப் பிணையமொன்று கைமாற்றப்படு கின்றதோ அத்துடன் கையுதிர்ப்பின் விளைவாக எந்தத் திறத்தவரின் பிணையக் கணக்கு வரவு வைக்கப்படு கின்றதோ, அந்தக் கையுதிர்ப்புக்கான திறத்தவர் என்று பொருளாகும் ; அத்துடன்

"கைமாற்றுபவர்" என்பது, கையுதிர்ப்புக்கான எந்தத் திறத்த வர் பிணையமொன்றைக் கைமாற்றுகின்றாரோ அத்து டன் கையுதிர்ப்பின் விளைவாக எந்தத் திறத்தவரின் பிணையக் கணக்குக்குப் பற்று வைக்கப்படுகின்றதோ அந் தக் கையுதிர்ப்புக்கான திறத்தவர் என்று பொருளாகும்.

## அத்தியாயம் III

## பணச் சேவைகளும் கொடுப்பனவு முறைமைகளும்

*மத்திய வங்கியானது, சேவை வழங்குவோரை மேற்பார்வை செய்தல் முதலியன.*

**11.** மத்திய வங்கியானது, இவ்வத்தியாயத்தின் ஏற்பாடு களினது நியதிகளின்படி, இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக அமைச்சர் ஆக்கக்கூடிய அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கிணங்க எல்லாச் சேவை வழங்குவோரையும் அல்லது ஏதேனும் குறித்து ரைக்கப்பட்ட வகுதியினரான சேவை வழங்குவோரையும் ஒழுங்கு படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல் வேண் டும்.

பணச்சேவை களுக்கும் கொடுப்பனவு முகாமை களுக்குமான பணிப்புரை.

**12.** (1) எவரேனுமாள் –

(அ) ஏதேனும் பணச்சேவையை வழங்குவதில் அல்லது ஒரு கொடுப்பனவு முறையைத் தொழிற்படுத்துவதில் ஏதேனும் பாதுகாப்பற்ற, திடமற்ற அல்லது நியாய மற்ற செயல்முறையில் ஈடுபட்டுள்ளார் அல்லது ஈடு படும் தறுவாயில் உள்ளார் என ;அல்லது

(ஆ) மத்திய வங்கியின் அபிப்பிராயத்தில் பணச் சேவைக ளுடன் அல்லது கொடுப்பனவு முறைமைகளுடன் அல்லது அவற்றின் ஏதேனும் வகுதியுடன் தொடர்பு பட்ட, இச்சட்டத்தின், அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட ஏதேனும் விதியின், அறிவுறுத்தலின், பணிப்புரையின் அல்லது கட்டளையின் ஏற்பாடுகளை மீறியுள்ளார் அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகு வதற்குத் தவறியுள்ளார் அல்லது அவற்றை மீறக்கூடிய அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறக் கூடிய சாத்தியம் கொண்டுள்ளார் என,

மத்திய வங்கியானது அபிப்பிராயப்படுமிடத்து, அவசியமென மத்திய வங்கி கருதக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள், அத்தகைய ஆளை –

(i) அச்செயலில், செய்யாமையில் அல்லது நடத்தை நெறியில் ஈடுபடாதொழியும்படியும் அதனைச் செய்யாது தவிர்க்கும்படியும் ;

(ii) மத்திய வங்கியின் அபிப்பிராயத்தில் நிலைமையை நிவர்த்தி செய்வதற்கு அவசியமாகவுள்ள அத்தகைய செயல்களைப் புரியும்படியும்,

தேவைப்படுத்தி அவ்வாளுக்குப் பணிப்புரையொன்றை அது வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு பணிப்புரையும், அது எந்தச் சேவை வழங்குநருக்கு பணிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சேவை வழங்குநருக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அது சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து நடைமுறையில் இருத்தலும் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு பணிப்புரையும், அது எவ்வாளுக்கு நெறிப்படுததப்படுகின்றதோ அந்த ஆளைப் பிணிப்பதாதல் வேண்டும்.

**13.** (1) மத்திய வங்கியானது, அவ்வாறு செய்வது பொதுமக்கள் நலனுக்குகந்ததென அது கருதினால் 14 ஆம், 15 ஆம் பிரிவுகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான மேலதிக ஒழுங்குபடுத்துகைக்கும் மேற்பார்வைக்கும் அமைந்ததாக்கப்படவேண்டிய கொடுப்பனவு முறைமையொன்றைப் பெயர்குறிக்கலாம். பெயர் குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமைகள்.

(2) ஒரு கொடுப்பனவு முறைமையைப் பெயர்குறிப்பது பொது மக்கள் நலனுக்குகந்ததாவென்பதைத் தீர்மானிக்கும்போது, பின் வரும் காரணிகள் கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டும் :—

(i) பங்குபற்றுநருக்கும் பயன்படுத்துவோருக்கும் கொடுப்பனவு முறைமையினால் வழங்கப்படும் நிதிசார் பாதுகாப்பு மட்டம் ;

(ii) இலங்கையிலுள்ள கொடுப்பனவு முறைமைகளின் திறமையும் போட்டாபோட்டித்தன்மையும் ; அத்துடன்

(iii) கொடுப்பனவு முறைமைப் பங்குபற்றுநர்களினதும் அவர்களின் வாடிக்கையாளர்களினதும் அல்லது இலங்கையிலுள்ள நிதிசார் முறைமையினதும் மிகச் சிறந்த அக்கறைகள்.

(3) ஒரு கொடுப்பனவு முறைமையைப் பெயர்குறிப்பதற்கு முன்னர், மத்திய வங்கியானது, அத்தகைய பெயர் குறித்தலின் விளைவுகள் தொடர்பில், கொடுப்பனவு முறைமையின் முகாமையாளரையும் பங்குபற்றுநர்களையும் கலந்தாலோசித்தல் வேண்டுமென்பதுடன், அக்கறைகொண்டுள்ள திறத்தவர்களையும் கலந்தாலோசிக்கலாம்.

(4) மத்திய வங்கியானது, மத்திய வங்கி தோதானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில், கொடுப்பனவு முறைமையைப் பெயர் குறித்தல்பற்றி முகாமையாளருக்கும் பங்குபற்றுநர்களுக்கும் அறிவித்தல் வேண்டும். பெயர் குறித்தலானது, அத்தகைய அறிவிப்பில் குறித்துரைக்கப்படும் தேதியிலிருந்து பயனுடையதாதல் வேண்டும். அத்தகைய ஒவ்வோர் அறிவித்தலும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பெயர் குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமைகளின் விதிகள்.

**14.** (1) பெயர் குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமையின் முகாமையாளர் அல்லது முகாமையாளர் எவரும் இல்லாதிருப்பின், முறைமையின் பங்குபற்றுநர்கள், இதனகத்துப் பின்னர் தரப்படுகின்றவாறான அத்தகைய காலப்பகுதியினுள், பெயர்குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமையை ஆளுகின்ற ஒவ்வொரு கொடுப்பனவு முறைமை விதியும் பற்றிய பிரதியொன்றை மத்திய வங்கிக்கு அனுப்புதல் வேண்டும் —

(i) கொடுப்பனவு முறைமை விதியொன்று, கொடுப்பனவு முறைமை பெயர்குறிக்கப்படுவதற்கு முன்னர் செய்யப்பட்டவிடத்து, அத்தகைய பெயர் குறித்தற் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் ; அத்துடன்

(ii) கொடுப்பனவு முறைமை விதியொன்று, கொடுப்பனவு முறைமை பெயர்குறிக்கப்பட்டபின்னர் செய்யப்பட்டவிடத்து, அத்தகைய விதி ஆக்கப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களினுள்.

(2) ஓராம் உட்பிரிவின் (i) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுப்பனவு முறைமை விதி தவிர்ந்த, கொடுப்பனவு முறைமை விதியொன்று, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் பிரதியொன்று மத்திய வங்கிக்கு அனுப்பப்பட்ட பின்னர் முப்பதாம் நாளுக்கு முன்னர் நடைமுறைக்கு வருதலாகாது :

ஆயின், மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதிகள் முடிவுறுமுன்னர் எந்நேரத்திலேனும் கொடுப்பனவு முறைமை விதி வலுவிலுள்ளதென மத்திய வங்கியானது வெளிப்படுத்தலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் நீடிப்பொன்று, கொடுப்பனவு முறைமை விதியொன்றின் போதிய மீளாய்வை அனுமதிப்பதற்குத் தேவைப்படுகின்றதென மத்திய வங்கியானது அபிப்பிராயப்படுமிடத்து, மத்திய வங்கியானது, அது பெறப்பட்ட பின்னர் பத்து நாட்களினுள், கொடுப்பனவு முறைமை விதியை அனுப்பியவருக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுத்தபின்னர், அக்காலப்பகுதியை முப்பது நாட்கள்வரை நீடிக்கலாம்.

(4) பெயர் குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமையொன்று வலுவுக்கு வருமுன்னர் அல்லது வந்தபின்னர் அல்லது வலுவிலுள்ளபோது எந்நேரத்திலேனும் அதனை ஆளுகின்ற கொடுப்பனவு முறைமைவிதியின் முழுமைக்கும் அல்லது அதன் ஒரு பாகத்துக்கு மத்திய வங்கியானது அனுமதிமறுக்கலாம். கொடுப்பனவு முறைமைவிதி ஒன்றுக்கு அவ்வாறு அனுமதி மறுக்கப்படும்போது, கொடுப்பனவு முறைமைவிதிக்கு அனுமதிமறுப்பதற்கு அதன் முடிவு பற்றி மத்திய வங்கியினால் அறிவுறுத்தப்பட்டவாறு, பெயர் குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமையொன்றின் முகாமை யாளருக்கு அல்லது பங்குபற்றுநருக்கு அதற்கு அனுமதி மறுப்பதற்கான முடிபு தெரிவிக்கப்படும் தருணத்திலிருந்து அல்லது அதன் பின்னர் எந்நேரத்திலும் அது பயனற்றதாக வரும்.

(5) (அ) பெயர் குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமையின் தொடர்ச்சியான சுமுகமான தொழிற்பாட்டை வசதிப்படுத்துவதற்கென, கொடுப்பனவு முறைமை விதியைத் திருத்துவதற்கான அல்லது மாற்றீடு செய்வதற்கான தேவையை ஏற்படுத்தி, வலுவிலுள்ள கொடுப்பனவு முறைமை விதியொன்றுக்கு (4) ஆம் உட்பிரிவின்கீழ் மத்திய வங்கியினால் முழுமையாக அல்லது பகுதியளவில் அனுமதிமறுக்கப்படுமிடத்து, அதற்கு அனுமதி மறுப்பதற்கான மத்திய வங்கியின் முடிபு, 15 ஆம் பிரிவைப் பின்பற்றி வழங்கப்பட்ட ஒரு பணிப்புரையில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். கொடுப்பனவு முறைமையை விதிக்குத் தேவையான திருத்தம் அல்லது மாற்றீடு பற்றி, மத்திய வங்கியானது, பெயர் குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமையின் முகாமையாளருக்கு அறிவித்தல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய பணிப்புரை ஒவ்வொன்றும், கொடுப்பனவு முறைமை விதிக்கான திருத்தம் அல்லது மாற்றீடு ஒன்று கொடுப்பனவு முறைமையினால் ஏற்றுக்கொள்ளப்படும்வரை ஏற்புடையற்பாலதாக இருக்கவேண்டிய தற்காலிகக் கொடுப்பனவு முறைமை விதிக்கான உரையொன்றை ஏற்பாடு செய்தல் வேண்டும். திருத்தப்படவுள்ள அல்லது மாற்றீடு செய்யப்படவுள்ள கொடுப்பனவு முறைமை விதி பயனற்றதாக வருவதன்மீது உடனடியாக, தற்காலிகக் கொடுப்பனவு முறைமை விதி பயனுடையதாகும்.

(6) மத்திய வங்கியானது, பெயர் குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமையொன்றை (2) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளினது ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கலாம்.

பெயர் குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமைகளுக்கான பணிப்புரைகள்.

**15.** (1) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று தொடர்பில் அல்லது அதற்கு மேற்பட்டவை தொடர்பில் மத்திய வங்கியானது, பெயர் குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமையின் முகாமையாளரொருவருக்கு அல்லது பங்குபற்றுநரொருவருக்கு எழுத்திலான பணிப்புரையொன்றை வழங்கலாம் –

(அ) பெயர் குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமையை அணுகுவதற்கான அல்லது அதன் பங்குபற்றுநரொருவராக வருவதற்கென எவரேனுமாளினால் பூர்த்தி செய்யப்படவேண்டிய நிபந்தனைகள் ;

(ஆ) பின்பற்றப்படவேண்டிய கணக்குத் தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் நடவடிக்கைமுறைகள் உட்பட பெயர்குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமையின் தொழிற்பாடு ;

(இ) பெயர்குறிக்கப்பட்ட கொடுப்பனவுமுறைமை, ஏனைய கொடுப்பனவு முறைமைகளுடன் கொண்டுள்ள செயலீடுபாடு ; அல்லது

(ஈ) அதன் பங்குபற்றுநர்களுடன் பெயர்குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமை கொண்டுள்ள உறவுமுறை.

(2) மத்திய வங்கியானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் எழுத்திலான பணிப்புரையை வழங்குமுன்னர், அது எவ்வாளுக்கு வழங்கப்படுகின்றபடுகின்றதோ அவ்வாளுடன் கலந்தாலோசித்தல் வேண்டுமென்பதுடன், பணிப்புரையின் உள்ளீடும் பயனும் தொடர்பில் அக்கறைகொண்டுள்ள எவரேனும் ஆட்களுடனும் கலந்தாலோசிக்கலாம்.

(3) மத்திய வங்கியானது, எழுத்திலான பணிப்புரையொன்றின் மூலம், பெயர்குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமையின் முகாமையாளர் ஒருவர் அல்லது அத்தகையவொரு முறைமையிலான பங்குபற்றுநர் ஒருவர், மத்திய வங்கி அவசியமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய காலத்தினுள் –

(i) ஒரு செயலின் அல்லது நடத்தைநெறியில் ஈடுபடாதொழிதல் அல்லது ஈடுபடுவதனைத் தவிர்த்தல் வேண்டுமென ;

(ii) மத்திய வங்கியின் அபிப்பிராயத்தில் பொதுமக்கள் நலன்கருதி அவசியமானவாறான அத்தகைய செயல் களைப் புரிதல் வேண்டுமென ; அல்லது

(iii) ஒரு கொடுப்பனவு முறைமை விதியை ஆக்குதல், திருத்து தல் வேண்டுமென

குறித்துரைக்கலாம்.

(4) ஒரு பணிப்புரையைச் செயற்படுத்திய பின்னரும் அது சம்பந்தமாக எடுக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் எவை யேனும் நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்த பின்னரும், அது எவ்வா ளுக்கு விடுக்கப்படுகின்றதோ அவ்வாள், பணிப்புரை செயற்படுத் தப்பட்டு நடவடிக்கை பூர்த்திசெய்யப்பட்டுள்ளதென மத்திய வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு பணிப்புரையும், அது எவ்வாளுக்கு வழங்கப்படுகின்றதோ அவ்வாளுக்கு அறிவிக் கப்படுதல் வேண்டுமென்பதுடன் அது வழங்கப்படும் தேதியி லிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும். பணிப்புரையொன்று எவ்வாளுக்கு வழங்கப்படுகின்றதோ அது அவ்வாளைப் பிணிப்ப தாதல் வேண்டும்.

தகவலும் கடப்பாடுகளும், இணங்கி யொழுகுதலும்.

**16.** (1) மத்திய வங்கியானது, இவ்வத்தியாயத்தின்கீழ், பெயர் குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமையொன்றின் சேவை வழங்கு வோரின் அத்துடன் ஒரு சேவை வழங்குநராகவிருப்பவரென மத்திய வங்கி தீர்மானிக்கக்கூடிய எவரேனுமாளின் கணக்குகளை யும், பதிவேடுகளையும், புத்தகங்களையும், ஆவணங்களையும், கணக்காய்வு செய்யலாம், பரிசோதனையிடலாம், அத்துடன் அவை காண்பிக்கப்படுவதனைத் தேவைப்படுத்தலாம், அவர்க ளின் அலுவலகங்களைப் பரிசோதனையிடலாம் மற்றும் அவர் களிடமிருந்து தகவல் பெறுவதற்காக வேண்டுகோள் விடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றதோ அந்த எவரேனுமாள், அல்லது அந்த ஆளொருவரின் ஊழியரொருவர், முகவர் அல்லது முகாமை யாளர் அதனோடு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது, அவசியமானதென அது கருதுகின்றவிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழான கணக்காய்வுகளும் பரிசோதனைகளும் தகைமைபெற்ற கணக்காய்வாளர்களினால் முழுமையாக, அல்லது பகுதியளவில், அதன் சார்பில் நிறை வேற்றப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தலாம் அவர்கள் தமது அறிக்கையை மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது, அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் (8) ஆம் பந்தியி லுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்.

(5) பங்குபற்றுநர் ஒவ்வொருவரும், கொடுப்பனவு முறைமை யொன்றின் முகாமையாளர்மீது இவ்வத்தியாயத்தின்கீழ் சுமத்தப் படும் எல்லாக் கடமைகளையும் புரிவதற்குத் தேவைப்படுத்தப் படுதல் வேண்டும்.

(6) கொடுப்பனவு முறைமையொன்றின் முகாமையாளர் ஒருவர், இவ்வத்தியாயத்தின்கீழ் அவர்மீது சுமத்தப்படும் கடமைகளைப் புரிவதற்குத் தவறுவாராயின், பங்குபற்றுநர்கள், கூட்டாகவும் தனித்தனியாகவும், அக்கடமைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன், முகாமையாளரைப்போன்று அதேமுறை யிலும் அதே அளவுக்கும் மீறுகைக்குப் பொறுப்பானவராதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் நியதிகளின்படியான ஏதேனும் கணக்காய்வு அல்லது பரிசோதனை தொடர்பாக, சத்தியத்தின்மீது சான்றைப் பெறுவதற்கான நோக்கங்களுக்காக, மத்திய வங்கியானது, (17 ஆம் அத்தியாயமான) சத்தியங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடு களினது நியதிகளின்படி சத்தியங்களை அல்லது உறுதியுரைகளை எடுத்தோதுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III ஆம் அத்தியாயத் துக்கான ஒழுங்குவிதிகள்.

**17.** (1)அமைச்சரானவர், இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுக ளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக, விதித்துரைக்கப் படவேண்டுமென அல்லது இவ்வத்தியாயத்தினால் தேவைப் படுத்தப்படும் ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது அவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப் படுத்தப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் ஏதேனும் கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர் -

(அ) எந்த நிபந்தனைகள், தேவைப்பாடுகள் மற்றும் நியமங்கள் என்பவற்றின்கீழ் பணச்சேவைகள் வழங்கப்படலாமோ அத்துடன் கொடுப்பனவு முறைமைகள் தொழிற்படுத்தப்பட்டுப் பெயர்குறிக்கப்படலாமோ அந்த நிபந்தனைகள், தேவைப்பாடுகள் மற்றும் நியமங்கள் என்பவற்றுக்காக ஏற்பாடு செய்வதற்கும் ;

(ஆ) சேவை வழங்குவோர் பதிவுசெய்யப்படுதலையும் அல்லது அவர்களுக்கு உரிமமளிக்கப்படுதலையும், அத்தகைய பதிவுசெய்தலுக்கும் உரிமமளித்தலுக்கும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைமையையும் தேவைப்படுத்துவதற்கும், அத்தகைய பதிவுசெய்தலுக்கான அல்லது உரிமமளித்தலுக்கான நிபந்தனைகளையும் தேவைப்பாடுகளையும் குறித்துரைப்பதற்கும், அத்துடன் அத்தகைய உரிமம் அல்லது பதிவு எச்சூழ்நிலைகளின்கீழ் மத்திய வங்கியினால் இல்லாதொழிக்கப்படலோமோ அச்சூழ்நிலைகளுக்கு ஏற்பாடுசெய்வதற்கும் ;

(இ) உரிமக் கட்டணமொன்றை அறவீடு செய்வதற்கும், சேவை வழங்குவோரைப் பதிவுசெய்வதற்கும், அவர்களுக்கு உரிமமளிப்பதற்குமான அத்தகைய இறுப்புக்களினதும் கட்டணங்களினதும் தொகையை ஏற்பாடு செய்வதற்கும் ;

(ஈ) சேவை வழங்குவோரை ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றுக்குத் தேவைப்படுத்தப்படும் நடவடிக்கை முறைகளைக் குறித்துரைப்பதற்கும் ;

(உ) உரிமமளித்தலும், பதிவுசெய்தலும், பெயர்குறித்தலும், ஒழுங்குவிதிகளினால் வகுப்பாக்கம் செய்யப்பட்டுத் தீர்மானிக்கப்படுகின்றவாறான சேவை வழங்குவோ

ரின் வெவ்வேறு வகுதிகள் தொடர்பில் அறவிடப்பட வேண்டிய கட்டணங்களும் இறுப்புகளும் என்பன உட்பட்ட ஏதேனும் கருமத்தின்மீது நிபந்தனைகள், தேவைப்பாடுகள், வழிகாட்டுநெறிகள், நடவடிக்கை முறை, வழிமுறைகளும் நியமங்களும் என்பவற்றைக் குறித்துரைப்பதற்கும் ;

(ஊ) ஒரு சேவை வழங்குநரின் சார்பில் பணச்சேவை யொன்றின் அல்லது கொடுப்பனவு முறைமையொன் றின் தொழிற்பாட்டின் ஏதேனும் பாகத்தை நிறை வேற்றுகின்ற அல்லது நிறைவேற்றுவதற்கு அதிகார மளிக்கப்படும் எவரேனுமாள் தொடர்பில் நிபந்தனை கள், தேவைப்பாடுகள், வழிகாட்டுநெறிகள், நட வடிக்கைமுறைகள், வழிமுறைகள் மற்றும் நியமங்கள் என்பன ஏற்புடையனவாகும் முறையைக் குறித்து ரைப்பதற்கும் ;

(எ) பண அனுப்புகைச் சேவைகளை வழங்குவோருட்பட, ஆட்கள் எந்நியதிகளின்கீழும் தேவைப்பாடுகளின் கீழும் ஒரு கொடுப்பனவு முறைமையில் பங்குபற்ற லாமோ அல்லது மத்திய வங்கியில் கணக்குகளையும் வைப்புக்களையும் பேணலாமோ அந்நியதிகளையும் தேவைப்பாடுகளையும் குறித்துரைப்பதற்கும் ;

(ஏ) கணக்கிடுதல் மற்றும் அறிக்கையிடுதல் தேவைப் பாடுகளுட்பட, சேவை வழங்குவோர் தொடர்பான மதிநுட்பமான தேவைப்பாடுகளைக் குறித்துரைப்ப தற்கும் ;

(ஐ) சேவை வழங்குவோரின் கூட்டிணைப்பு அல்லது ஒழுங்குபடுத்துகை பற்றியவிதம், நிர்வாகம், முகாமை, ஆளுகை, கட்டுப்பாடு, மூலதனப் போதுமாந்தன்மை மற்றும் வேறு மூலதனத் தேவைப்பாடுகள், சொத் தாண்மைக் கட்டமைப்பு, பங்குதாரர்களினதுமு நிரு வாகிகளினதும் தரம், அத்துடன் தொழில், முதலீட்டுத் தத்துவங்கள் என்பன தொடர்பான கருமங்களுட்பட, அவர்களின கூட்டிணைப்புக் கருமங்கள் மீதான தேவைப்பாடுகளையும், நியமங்களையும், வழிகாட்டு நெறிகளையும் குறித்துரைப்பதற்கும் ;

(ஒ) குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வடிவத்திலும் விபரத்திலும், சேவை வழங்குவோரின் வாடிக்கையாளர்கள் பற்றி அல்லது பங்குபற்றுநர்கள் பற்றிய தகவல் உட்படவும் அவர்களின் ஏதேனும் வகுதியினரின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகவும் குறித்துரைக்கப்படக்கூடியவாறான கருமங்கள்மீது தகவலைச் சேகரித்தல், தகவலைப் பதிவேட்டில் பேணுதல் மற்றும் தகவலை வங்கிக்கு அறிக்கையிடுதல் என்பன தொடர்பான தேவைப்பாடுகள், நியமங்கள், வழிகாட்டுநெறிகள் ஆகியன உள்ளடங்கலாக, மத்திய வங்கியினால் அவை பரிசோதனை செய்யப்படுவதனை வசதிப்படுத்துதலை நோக்காகக்கொண்ட சேவை வழங்குவோருக்கான தேவைப்பாடுகள், நியமங்கள் மற்றும் வழிகாட்டுநெறிகள் என்பவற்றைக் குறித்துரைப்பதற்கும் ; அத்துடன்

(ஓ) வாடிக்கையாளர்களையும் பங்குபற்றுநர்களையும் அவர்களுள் எவரேனும் வகுதியினரையும் பாதுகாப்பதற்கு அவசியமான வழிமுறைகளையும் குறித்துரைப்பதற்கும், குறிப்பாக, வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகளைக் குறித்துரைப்பதற்கும் பணச்சேவை வழங்குவோரினதும், அவர்களின் வாடிக்கையாளர்களினதும் கொடுப்பனவு முறைமைகளினதும் அவற்றின் பங்குபற்றுநர்களினதும் நியதிகள் பற்றி ஒப்பந்தம் செய்வதற்கும்,

ஆன ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்

படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கப்படும் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

IIIஆம் அத்தியாயத்துக்கான பொருள் கோடல்.

**18.** சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக -

"காசோலை மீது பணம் பெறுதல்" என்பது பணத்துக்கு, கொடுப்பனவுச் சாதனங்களுக்கு, அல்லது கொடுப்பனவுச் சாதனத்தை அல்லது உள்ளடக்கப் பெறுமதியை ஒப்படைக்கும் ஆளுக்கு ஒப்படைக்கப்பட்ட உள்ளடக்கப் பெறுமதிக்குப் பரிமாற்றாக, கொடுப்பனவுச் சாதனங்களை அல்லது உள்ளடக்கப் பெறுமதியை எடுப்பதற்காக நட்டஈடு பெறுதல் என்று பொருளாகும் ;

"நாணயப் பரிமாற்றம்" என்பது, இன்னுமோர் அரசாங்கத்தினால் வழங்கப்படும், நிலைநாட்டப்படும், அதிகாரமளிக்கப்படும் அல்லது ஏற்றுக்கொள்ளப்படும் பணத்துக்காக, அல்லது அதன் பணக்கூறில் வகுதிப்படுத்தப்படும் பணப்பெறுமதிக்காக, ஓர் அரசாங்கத்தினால் வழங்கப்படும், நிலைநாட்டப்படும், அதிகாரமளிக்கப்படும் அல்லது ஏற்றுக்கொள்ளப்படும் பணப்பரிமாற்றத்திலிருந்து, அல்லது அதன் பணக்கூறில் வகுதிப்படுத்தப்படும் பணப்பெறுமதியிலிருந்து அரசிறைகளைப் பெறுதல் என்று பொருளாகும் ;

"பெயர்குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமை" என்பது, இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் பெயர்குறிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமையொன்று என்று பொருளாகும் ;

"முகாமையாளர்" என்பது, சேவை வழங்குவோரின் பணிப்பாளர் சபை உறுப்பினரொருவரை உள்ளடக்குமென்பதுடன், மத்திய வங்கியின் அபிப்பிராயத்தில் சேவை வழங்குபவரொருவரின் தொழிலையும் அலுவல்

களையும் மேற்பார்வை செய்வதற்கும் அதன் முகாமைக் குப் பொறுப்பாகவிருப்பதற்குமான நிலையில் உள்ளவ ரான எவரேனுமாள் என்றும் பொருளாகும். ஒரு முகாமையாளருக்கு விடுக்கப்படவேண்டிய இவ்வத்தியா யத்தின் கீழான அறிவித்தல் முகாமையாளராகவிருப்ப தற்கு இன்னுமோராளை மத்திய வங்கி குறிப்பாகப் பெயர் குறித்தாலொழிய, சேவை வழங்குபவரினால் மத்திய வங்கிக்கு மதியுரையளிக்கப்படுகின்வாறாக முகாமை யாளருக்கு விடுக்கப்படல் வேண்டும் ;

"பணப்பெறுமதி" என்பது, உள்ளடக்கப் பெறுமதி, கொடுப் பனவுச் சாதனம் அல்லது கணக்குக்கான வரவு என்ற வடிவத்திலுட்பட, பணத்தில் மீட்கப்படற்பாலதாயினுஞ் சரி அல்லாதாயினுஞ்சரி, பரிமாற்றல் ஊடகமொன்று என்று பொருளாகும் ;

"பணம்" எனபது, இலங்கையினால் அல்லது ஒரு வெளிநாட்டு அரசாங்கத்தினால் வழங்கப்படும், நிலைநாட்டப்படும், அதிகாரமளிக்கப்படும் அல்லது ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு பணக்கூறு அல்லது பரிமாற்றல் ஊடகம் என்று பொருளாகும். இப்பதமானது, அரசாங்கங்களுக் கிடையேயான ஒழுங்கமைப்பொன்றினால் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசாங்கங்களுக் கிடையேயான உடன்படிக்கையினால் வழங்கப்படும், நிலைநாட்டப்படும், அதிகாரமளிக்கப்படும் அல்லது ஏற்றுக்கொள்ளப்படும் பணக்கூறொன்றையும் அல்லது பரிமாற்றல் ஊடகமொன்றையும் உள்ளடக்கும் ;

"பணச்சேவைகள்" என்பது, பாதுகாப்பாக வைத்திருத்தல், பண அனுப்புகை, காசோலைமீது பணம்பெறுதல் அல்லது நாணயப் பரிமாற்றம் என்பன தொடர்பான எவை யேனும் சேவைகளும், அத்துடன் எவையேனும் இவற்றையொத்த சேவைகளும் உட்பட, பணம் தொடர்பான வேறு சேவைகள் என்று பொருளாகும் ;

"பண அனுப்புகை" என்பது பணப்பெறுமதியை விற்பனை செய்தல் அல்லது வழங்குதல் அல்லது ஒன்றில் பணம் அனுப்புபவரிடமிருந்து அல்லது நன்மை பெறுநர்

ஒருவருக்காகப் பணம் அனுப்புதல் அல்லது பணப்பெறுமதி சம்பந்தமாகப் பணம் அல்லது பணப்பெறுமதி பெறுதல் என்று பொருளாகும் ; அத்துடன் பணம் மீளப் பெறுவதற்கான, கணக்குகளிடையே பணப்பெறுமதியைக் கைமாற்றுவதற்கான அல்லது மூன்றாம் திறத்தவர்களுக்கு பணப்பெறுமதியைக் கொடுப்பனவு செய்வதற்கான வசதியொன்றை ஏற்பாடு செய்தலையும் உள்ளடக்கும். இப்பதமானது, அனுப்புபவரோ அல்லது நன்மை பெறுநரோ அத்தகைய கொடுக்கல்வாங்கலுக்கு அல்லது ஒழுங்கேற்பாட்டுக்கு ஒரு திறத்தவராக அல்லது நேரடிப் பங்கு பற்றுநராகவிராதிருப்பினுங்கூட, அனுப்புபவரிடமிருந்து நன்மை பெறுநருக்குப் பண அனுப்புகையை நிறைவேற்றுவதில் சம்பந்தப்பட்டுள்ள ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் அல்லது ஒழுங்கேற்பாட்டில் பங்குபற்றுதலையும் உள்ளடக்கும். பண அனுப்புகையானது, இலங்கையினுள் அல்லது வேறேதேனும் நாட்டினுள் அல்லது இலங்கைக்கு அல்லது வேறேதேனும் நாட்டுக்கு அல்லது இலங்கையிலிருந்து அல்லது வேறேதேனும் நாட்டிலிருந்து, ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குச் செய்யப்படலாம் ;

“பங்குபற்றுநர்” என்பது, ஒரு கொடுப்பனவு முறைமை தொடர்பில் ஓர் ஒழுங்கேற்பாட்டுக்கான திறத்தவரொருவர் என்று பொருளாகும். அது ஒரு வங்கியை, பண அனுப்புகைச் சேவைகளை வழங்குபவரொருவரை அல்லது வேறெவரேனுமாளை உள்ளடக்கலாம். ஆனால், கொடுப்பனவு முறைமையை அறிவுறுத்தும் அல்லது அதன்மீது கொடுப்பனவுபெறும் பங்குபற்றுநரொருவரின் பயன்படுத்துநரை அல்லது வாடிக்கையாளரை உள்ளடக்காது ;

“கொடுப்பனவு அட்டை” என்பது, பணம் பெறுவதற்கு அல்லது கொடுப்பனவு செய்வதற்குக் காலத்துக்குக் காலம் பயன்படுத்தப்படக்கூடிய, கணக்கொன்றுக்கான அல்லது கடனுக்கான அல்லது உள்ளடக்கப் பெறுமதிக்கான குறியீடொன்றை அல்லது வேறெவையேனும் அணுகுகை வழிவகைகளை உள்ளடக்குகின்ற ஏதேனும் அட்டை, தட்டு, கூப்பன் புத்தகம் அல்லது வேறு உபாயம் என்று பொருளாகும் என்பதுடன், பற்று, இறுப்பு, வரவு மற்றும் உள்ளடக்கப் பெறுமதி அட்டையையும் உள்ளடக்கும் ;

**2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு 27 மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டம்**

"கொடுப்பனவுச் சாதனம்" என்பது, காசோலை, வரைவு, பணக்கட்டளை, பயணிக் காசோலை, கொடுப்பனவு அட்டை அல்லது கைமாற்றப்படற்பாலதாயினுஞ்சரி அல்லாதாயினுஞ்சரி, பணத்தை அல்லது பணப் பெறுமதியை அனுப்புவதற்கான அல்லது கொடுப்பனவு செய்வதற்கான வேறு சாதனம் என்று பொருளாகும். இப்பதமானது, வரவு அட்டை உறுதிச்சீட்டை, வரவுக் கடிதத்தை அல்லது பண்டங்களில் அல்லது சேவை களில் வழங்குநரினால் மீட்கப்படற்பாலதான சாத னத்தை உள்ளடக்காது ;

"கொடுப்பனவு முறைமை" என்பது, கொடுப்பனவுக் கட்டளை களையும், கொடுப்பனவுகளைச் செய்வதனை, பண அனுப்புகையை, பண மீளப்பெறுதல்களை, அல்லது பணப்பெறுமதியிலான கைமாற்றுதல்களைப் பயனுறுத் துகின்ற, கட்டளையிடுகின்ற, இயலச்செய்கின்ற, அல்லது வசதிப்படுத்துகின்ற ஏனைய செய்திகளையும் அறிவிப்பதற்கான, செயல்முறைப்படுத்துவதற்கான, பரிமாற்றுவதற்கான, கணக்குத்தீர்வு செய்வதற்கான அல்லது கொடுத்துத்தீர்ப்பதற்கான ஒரு முறைமை அல்லது ஒழுங்கேற்பாடு என்று பொருளாகும் ;

"கொடுப்பனவு முறைமை விதி" என்பது, ஒரு கொடுப்பனவு முறைமையின் தொழிற்பாடு, கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தலுட்பட, அதனை ஆளுகின்ற, மத்திய வங்கியினால் வழங்கப்படுமொன்றல்லாத எத்தகையது மான பெயரினாலும் அழைக்கப்படும் ஒரு விதி என்று பொருளாகும். அது, கொடுப்பனவு முறைமை விதி யொன்றுக்கான திருத்தத்தை அல்லது நீக்கத்தை உள்ள டக்கும் ;

"ஆள்" என்பது, ஒரு தனியாள், கூட்டுத்தாபனம், வியாபார நம்பிக்கைப்பொறுப்புச்சொத்து, நம்பிக்கைப்பொறுப்பு, பங்குடைமை, பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பெனி, கழகம், கூட்டு முயற்சி, அரசாங்கம், அரசாங்க உட்பிரிவு, முகவர்நிலையம் அல்லது செயலுறு அமைப்பு, பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது தனிவேறான சட்ட ஆளுமை யுடனோ அல்லாதோ ஆன வேறேதேனும் பகிரங்க, தனியார் அல்லது வர்த்தகக் குழு, கூறு அல்லது ஒழுங்கமைப்பு என்று பொருளாகும் ;

"பதிவேடு" என்பது, உருவ ஊடகமொன்றின்மீது பொறிக்கப் படும் அல்லது இலத்திரன்முறை அல்லது வேறு ஊடகத்தில் உள்ளடக்கப்பட்டுப் புலப்படற்பாலதான வடிவத்தில் மீளப்பெறப்படற்பாலதான தகவல் என்று பொருளாகும் ;

"சேவை வழங்குநர்" என்பது, பணச்சேவைகளை வழங்குகின்ற அல்லது கொடுப்பனவு முறைமையொன்றைத் தொழிற்படுத்துகின்ற எவரேனுமாள் என்று பொரு ளாகும் ; அத்துடன்

"உள்ளடக்கப் பெறுமதி" என்பது, இலத்திரன்முறைப் பதிவேடொன்றினால் சான்றுப்படுத்தப்படும் பணப் பெறுமதி என்று பொருளாகும்.

## அத்தியாயம் IV

## கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள்

*பெயர் குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள்.*

**19.** (1) இலங்கையின் நிதிமுறைமைக்கு அபாயமொன்றை ஏற்படுத்துகின்றவாறான அத்தகையவொரு முறையில் கணக்குத் தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையொன்று தொழிற் படுத்தப்படக்கூடுமென மத்திய வங்கி அபிப்பிராயப்படுமிடத்து, மத்திய வங்கி யானது, கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையை, இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கமைந்ததாக வுள்ளமுறைமைசார் முக்கியத்துவம்வாய்ந்த கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறையாகப் பெயர்குறிக்கலாம்.

(2) மத்திய வங்கியானது, எழுத்தில், பெயர்குறித்தல் பற்றி, பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையின் கணக்குத்தீர்வு மனைக்கு அறிவித்தல் வேண்டு மென்பதுடன் பெயர் குறித்தல் பற்றிய பிரதியொன்றைக் கசெற்றில் வெளியிடுவித்தலும் வேண்டும். இயைபான அறிவிப்பு விடுக்கப் பட்ட தேதியிலிருந்து பெயர்குறித்தலானது பயனுடையதாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் இப்பாகத்தின் IV ஆம் அத்தியாயத்தின் கீழ் முறைமைசார் முக்கியத்துவம்வாய்ந்ததாகக் கணக்குத்தீர்வு மற்றும்

கொடுத்துத்தீர்த்தல் முறைமையைப் பெயர்குறித்தலானது, இச்சட்டத்தின் இப்பாகத்தின் IIIஆம் அத்தியாயத்தின்கீழ் மேலதிக ஒழுங்குபடுத்துகை, மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு என்பவற்றுக்கு அமைந்ததாகவுள்ள கொடுப்பனவு முறைமையொன்றாக அதேமுறைமையைப் பெயர்குறித்தலுக்கு மேலதிகமானதாக விருக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், மேற்கூறப்பட்டவாறு இச்சட்டத்தின் இப்பாகத்தின் இரு அத்தியாயங்களினதும் நியதிகளின்படி பெயர்குறித்தலொன்று செய்யப்படுமிடத்து, முறையே இரு அத்தியாயங்களின் கீழுமான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல், இச்சட்டத்தின் III ஆம், IV ஆம் அத்தியாயங்களின் ஏற்பாடுக ளுக்கு அமைந்தோராகவுள்ள ஆட்களின் கடப்பாடாதல் வேண்டும்.

*கணக்குத்தீர்வு மனையுடனான, அல்லது பங்குபற்று நருடனான உடன் படிக்கைகள்.*

**20.** (1) மத்திய வங்கியானது, பின்வரும் கருமங்கள் தொடர்பில் விதிகளையும், அறிவுறுத்தல்களையும், பணிப்புகளையும் வழங்கலாமென்பதுடன், கணக்குத்தீர்வு மனையொன்றுடன் அல்லது பெயர் குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையின் பங்குபற்றுநரொருவருடன், அல்லது இரண்டுடனும் ஏதேனும் உடன்படிக்கையையும் செய்துகொள்ளலாம் :-

(அ) வலைப்பின்னல் ஒழுங்கேற்பாடுகள் ;

(ஆ) அபாயப் பகிர்வு மற்றும் அபாயக் கட்டுப்பாட்டுப் பொறிமுறைகள் ;

(இ) கொடுத்துத் தீர்த்தலின் நிச்சயத்தன்மையும் கொடுப்பனவின் இறுதித்தன்மையும் ;

(ஈ) பங்குபற்றுநர்களிடையேயான நிதிசார் ஒழுங்கேற்பாடுகளின் தன்மை ;

(உ) கணக்குத்தீர்வு மனையின் தொழிற்பாட்டு முறைமைகளும் நிதிசார் திடத்தன்மையும் ; அத்துடன்

(ஊ) பணச்சபையின் கருத்தில் நிதிசார் முறைமையில் அபாயம் பற்றிய அத்தகைய வேறு கருமங்கள்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) முதல் (ஊ) வரையிலான பந்திகளின் குறித்துரைக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாமென்பதுடன், ஏதேனும் விதிக்கும், அறிவுறுத்தலுக்கும், பணிப்புக்கும் அல்லது உடன்படிக்கைக்கும், இச்சட்டத்தின்கீழ் அதற்கென ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கும் இடையே முரண்பாடொன்று ஏற்படும் பட்சத்தில், அத்தகைய ஒழுங்குவிதி மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

பணிப்புரைகள்.

**21.** (1) நிதிசார் முறையில் அபாயம் போதியளவு கட்டுப்படுத்தப் படாதுள்ளமையை விளைவிக்கின்ற அல்லது விளைவிக்கும் சாத்தியம்கொண்ட —

(i) ஏதேனும் செயலில், செய்யாமையில் அல்லது நடத்தை நெறியில், பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையொன்றுக்கான கணக்குத் தீர்வு மனையொன்று ஈடுபடுகின்றதென அல்லது ஈடு படும் தறுவாயில் உள்ளதென ;

(ii) ஏதேனும் செயலில், செய்யாமையில் அல்லது நடத்தை நெறியில், பங்குபற்றுநரொருவர், பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமை யில் பங்குபற்றுதல் தொடர்பில் ஈடுபடுகின்றாரென அல்லது ஈடுபடும் தறுவாயில் உள்ளாரென ; அல்லது

(iii) ஒரு முறையில் பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமை தொழிற்படு கின்றதென அல்லது தொழிற்படுத்தப்படும் தறுவாயில் உள்ளதென,

மத்திய வங்கி அபிப்பிராயப்படுமிடத்து, மத்திய வங்கியானது, மத்திய வங்கி அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய காலத்தினுள் —

(i) அச்செயலில், செய்யாமையில் அல்லது நடத்தை நெறியில் ஈடுபடாதொழியும்படி அல்லது அதில் ஈடுபடுவதனைத் தவிர்க்கும்படி கணக்குத்தீர்வு மனை யைத் தேவைப்படுத்தி, அல்லது அச்செயலில், செய்யா

மையில் அல்லது நடத்தைநெறியில் ஈடுபடாதொழியும்படி அல்லது அதில் ஈடுபடுவதனைத் தவிர்க்கும்படி பங்குபற்றுநர்களைத் தேவைப்படுத்தி ;

(ii) மத்தியவங்கியின் அபிப்பிராயத்தில் நிலைமையை நிவர்த்திசெய்வதற்கு அவசியமானவாறான அத்தகைய செயல்களைப் புரியம்படி அல்லது பங்குபற்றுநர் அத்தகைய செயல்களைப் புரிவதனைச் செய்விக்கும்படி தேவைப்படுத்தி,

கணக்குத் தீர்வு மனைக்கு எழுத்தில் பணிப்புரையொன்றை வழங்கலாம்.

(2) நிதிசார் முறைமையில் அபாயம் போதியளவு கட்டுப் படுத்தப்பட வில்லையென (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி மத்திய வங்கி அபிப்பிராயப்படுமிடத்து,—

(i) கணக்குத்தீர்வு மனையானது (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அதற்கு வழங்கப்பட்டுள்ள பணிப்புரையொன்றுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளதென ;

(ii) பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமை, இலங்கையில் அமைந்துள்ள கணக்குத்தீர்வு மனையொன்றைக் கொண்டிருக்க வில்லையென,

மத்திய வங்கிக்குத் தோன்றுமிடத்தும் ; அல்லது

(iii) மத்திய வங்கியின் அபிப்பிராயத்தில் —

(அ) பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையில் பங்குபற்றுநரொருவர் பங்குபற்றியமை தொடர்பில் அவரின் செயல், செய்யாமை அல்லது நடத்தைநெறி, என்பவற்றின் விளைவாக நிதிசார் முறைமையில் அபாயம் போதியளவு கட்டுப்படுத்தப்படாதுள்ளவிடத்தும் ; அத்துடன்

(ஆ) அச்செயல், செய்யாமை அல்லது நடத்தைநெறி, பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமை தொடர்பாக ஏதேனும் உடன்படிக்கைக்கு, விதிக்கு, நடவடிக்கைமுறைக்கு, வழிகாட்டுநெறிக்கு அல்லது வேறு ஆவணப்படுத்தலுக்கு இணங்கியொழுகாதவிடத்தும்,

மத்திய வங்கியானது, அவசியமானதென மத்திய வங்கி கருதுகின்றவாறான அத்தகைய காலத்தினுள், எவரேனும் பங்குபற்றுநர் —

(i) பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையில் அவரின் பங்குபற்றுகை தொடர்பில் குறித்தசில செயல்களில், செய்யாமைகளில் அல்லது நடத்தைநெறிகளில் ஈடுபடாதொழியும்படி அல்லது ஈடுபடுவதனைத் தவிர்க்கும்படி அவரைத் தேவைப்படுத்தி ; அத்துடன்

(ii) நிலைமையைப் நிவர்த்தி செய்வதற்கு மத்திய வங்கி அவசியமானதெனக் கருதுகின்றவாறாக அவரின் பங்குபற்றுகை தொடர்பில் அத்தகைய செயல்களைப் புரியும்படி அவரைத் தேவைப்படுத்தி, எழுத்திலான

பணிப்புரையொன்றை அவருக்கு வழங்கலாம்.

(3) இப்பிரிவின்கீழான பணிப்புரையொன்று, பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையில் பங்குபற்றுவதுடன் நேரடியாகத் தொடர்புபட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் விடுக்கப்படலாம். இப்பிரிவின் கீழான பணிப்புரையொன்று பின்வருவன தொடர்பில் விடுக்கப்படலாகாது :-

(i) ஒரு பங்குபற்றுநரின் மூலதனப் போதுமாந்தன்மையை;

(ii) அதன் முதலீடுகளை முகாமைசெய்தல் ;

(iii) அதன் கூட்டிணைப்பு ஆளுகை ;

(iv) பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையில் தாமே பங்குபற்றுநர்களாக விராத வாடிக்கையாளர்களுடனான அதன் உறவுகள் ; அல்லது

(v) அதன் சொத்தாண்மைக் கட்டமைப்பு.

(4) பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையினுள் கணக்குத்தீர்வு செய்வதிலிருந்து எழுகின்ற கொடுப்பனவுக் கடப்பாடுகள், மத்திய வங்கியில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பங்குபற்றுநர்களின் கணக்குக்கான அல்லது கணக்குகளுக்கான சீராக்கல்கள்மூலம் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமெனப் பணிப்புரையொன்று தேவைப் படுத்தலாம்.

(5) பணிப்புரையொன்று, அது அவ்வாறு ஏற்பாடு செய்தல், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்படும் பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் பணிப்புரையொன்று, அது எவ்வாளுக்கு நெறிப்படுத்தப்படுகின்றதோ அவ்வாளுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், கசெற்றில் வெளியிடப் படுதலும் வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் பணிப்புரை யொன்று, அது வழங்கப்படும் தேதியன்று நடைமுறைக்குவருதல் வேண்டும்.

(7) பணிப்புரையொன்று எவ்வாளுக்கு வழங்கப்படுகின்றதோ அவ்வாளை அது பிணிப்பதாதல் வேண்டும்.

**22.** (1) மத்திய வங்கியானது, பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையும் அதன் கணக்குத்தீர்வு மனையும் தொடர்பாகப் பின்வரும் பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் புரியலாம் :— மத்திய வங்கியின் தத்துவங்கள்.

(அ) பங்குபற்றுநர்களினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட அல்லது பிணைப்பொறுப்பளிக்கப்படாத கொடுத்துத் தீர்த்தல் உத்தரவாதமொன்றை வழங்குதல் ;

(ஆ) கணக்குத்தீர்வு மனைக்கும் மத்திய எதிர்த்திறத்தவருக்கும் திரவத்தன்மையினவான கடன்களை வழங்குதல் ; அத்துடன்

(இ) பங்குபற்றுநர்களுக்கான மத்திய எதிர்த்திறத்தவராகச் செயலாற்றுதல்.

(2) பங்குபற்றுநரொருவர் பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையில் பங்குபற்றுதல், ஏற்றுக் கொள்ளத்தகாத நிதிசார் முறைமையில்அபாயத்தை, அல்லது அப்பங்குபற்றுநரின் கடப்பாடுகளைக் கொடுத்துத்தீர்ப்பதனை உத்தரவாதமளிப்பதில் மத்திய வங்கிக்கு ஏற்றுக்கொள்ளத்தகாத அபாயத்தை ஏற்படுத்துகின்றது அல்லது ஏற்படுத்தும் சாத்தியம் கொண்டது என மத்திய வங்கி அபிப்பிராயப்படின், மத்திய வங்கியானது,—

(அ) அப்பங்குபற்றுநரின் பங்குபற்றுகையை இடைநிறுத்தலாம் ; அல்லது

(ஆ) பங்குபற்றுநராகவிருப்பதிலிருந்து அவரைத் தடைசெய்யலாம் ; அல்லது

(இ) மத்திய வங்கி அவசியமெனக் கருதுகின்றவாறாக அதன் பங்குபற்றுகை தொடர்பில் அத்தகைய நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகும்படி அவரைத் தேவைப்படுத்தலாம்.

கடனிறுக்க வகையறவு வழக்கு நடவடிக்கைகள்.

**23.** (1) பிரிவுகள் 23, 24 என்பவற்றில், “கடனிறுக்கவகைறவு வழக்கு நடவடிக்கைகள்” என்பது, தன்னிச்சையாயினுஞ்சரி, தன்னிச்சையல்லாததாயினுஞ் சரி ஒன்றில் பங்குபற்றுநரை ஒடுக்குவதற்கு அல்லது அவரை மீள ஒழுங்குபடுத்துவதற்கு, அல்லது (81 ஆம் அத்தியாயமான) கடனிறுக்கவகையறவுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தொடுக்கப்படும் கடனிறுக்கவகையறவு வழக்கு நடவடிக்கைகள் உட்பட, அவரின் வியாபாரத்தை இடை நிறுத்துவதற்கு எவையேனும் கூட்டு வழிமுறைகள் கொடுப்பனவுக் கட்டளைகளையும் கொடுப்பனவுகளையும் இடைநிறுத்துவதனை அல்லது அவற்றின்மீது வரையறைகளை விதிப்பதனை உள்ளடக்குமிடத்து, ஏற்புடையற்பாலதான ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட அத்தகைய வழிமுறை என்று பொருளாதல் வேண்டும்.

(2) பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையினுள்ளும் அவற்றின் தேறுகைக்குள்ளும் பதியயப்பட்டுள்ள கொடுப்பனவுக் கட்டளைகள், பங்குபற்று நரொருவருக்கெதிராகக் கடனிறுக்கவகையறவு வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், சட்டப்படி வலுவுறுத் தப்படற்பாலனவையும் மூன்றாம் திறத்தவர்களைப் பிணிப்பன வாயும் இருத்தல் வேண்டும். ஆயின் கடனிறுக்கவகையறவு வழக்கு நடவடிக்கைகள் தொடங்குமுன்னர் கொடுப்பனவுக் கட்டளைகள் முறைமையினுட்பதியப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) கடனிறுக்க வகையறவு வழக்கு நடவடிக்கைகள் தொடங்கிய பின்னர் பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு, கொடுத்துத்தீர்த்தல் முறையினுட் கொடுப்பனவுக் கட்டளைகள் பதியப்பட்டு, அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் தொடங்கும் நாளன்று நிறைவேற்றப் படுமிடத்து, அத்தகைய கொடுப்பனவுக் கட்டளைகள், கொடுத்துத் தீர்க்கப்பட்ட நேரத்தின்பின்னர் மத்திய எதிர்த் திறத்தவர்கள் அல்லது கணக்குத்தீர்வுமனை, அத்தகைய வழக்கு நடவடிக்கை கள் தொடங்கப்பட்டமைபற்றி அறிந்திருக்கவில்லை அல்லது அறிந்திருக்கக்கூடியவர்களல்லர் என்ற நிகழ்வுபற்றி நீதிமன்றத் தின் திருப்திக்குச் சான்று கொடுத்துவக்கூடியவர்களாக இருந்தால் மட்டுமே, சட்டப்படி வலுவுறுத்தப்படற்பாலனவாகவிருத்தலும் மூன்றாம் திறத்தவர்களைப் பிணிப்பனவாகவிருத்தலும் வேண் டும்.

(4) பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையிலும் கொடுப்பனவுக் கட்டளையொன்று பதியப்பட்ட குறித்த தருணம் அம்முறைமையின் விதிகளினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, கடனிறுக்க வகையறவு வழக்கு நடவடிக்கைகள் தொடங்கும் நேரமானது, ஒன்றில் தீர்ப்பு அல்லது கடனிறுக்கவகையறவுக் கட்டளை, ஒடுக்குதல் அல்லது இடைநிறுத்துதல் எடுத்தியம்பப்படுகின்ற அல்லது தன்னிச்சை யான ஒடுக்குதலுக்கான பயனுள்ள தீர்மானம் நிறைவேற்றப் படுகின்ற தருணமாகும்.

(6) ஐந்தாம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக, எந்தப் பங்குபற்றுநருக்கெதிராகத் தீர்ப்பு அல்லது கட்டளை எடுத்தியம்

பப்படுகின்றதோ, அல்லது தன்னிச்சையான ஒடுக்குதலுக்கான பயனுள்ள தீர்மானமொன்றை எந்தப் பங்குபற்றுநர் நிறைவேற்றியுள்ளாரோ அந்தப் பங்குபற்றுநர் மத்திய வங்கிக்கும் ஏற்புடையற்பாலதாகுமிடத்து, விடயத்துக்கேற்ப, மத்திய எதிர்த்திறத்தவருக்கும் அல்லது கணக்குத் தீர்வு மனைக்கும் அந்தத் தீர்ப்பு கட்டளை அல்லது தீர்மானம் பற்றி, அது எடுத்தியம்பப்படும் அல்லது நிறைவேற்றப்படும் நாளன்று மதியுரையளித்தல் வேண்டும்.

(7) கடனிறுக்கவகையறவு வழக்கு நடவடிக்கைகள், தொடங்கும் நேரத்துக்கு முன்னர் பெயர் குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைமீது கொடுப்பனவுக் கடப்பாடுகளைக் கணக்குத் தீர்வு செய்வதிலிருந்தும் கொடுத்துத் தீர்ப்பதிலிருந்தும் எழுகின்ற, பங்குபற்றுநரொருவரின் உரிமைகளின் மீதும், கடப்பாடுகளின்மீதும் அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் ஏதேனும் பின்னோக்கிச்செயலுறும்பயனைக்கொண்டிருத்தலாகாது.

கொடுத்துத் தீர்த்தல் விதிகள்.

**24.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், —

(i) பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையின் கொடுத்துத் தீர்த்தல் விதிகள், செல்லுபடியுள்ளனவாகவும் கணக்குத் தீர்வுமனை, பங்குபற்றுநர்கள், மத்திய எதிர்த்திறத்தவர்கள் மற்றும் மத்திய வங்கி என்பவற்றைப் பிணிப்பனவாகவும் இருத்தல் வேண்டும். அத்தகைய கொடுத்துத்தீர்த்தல் விதிகளுக்கிணங்க ஏதேனும் வழக்கு நடவடிக்கை செல்லுபடியான முறையில் தொடங்கப்படலாம் அல்லது ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படலாம்

(ii) பங்குபற்றுநரொருவருக்குக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு ஒரு பங்குபற்றுநருக்கு ஒரு கணக்குத் தீர்வுமனைக்கு, அல்லது ஒரு மத்திய எதிர்த்திறத்தவருக்கு உள்ள கடப்பாடு, அத்துடன் ஒரு பங்குபற்றுநரிடமிருந்து, ஒரு கணக்குத் தீர்வு மனையிடமிருந்து அல்லது ஒரு மத்திய எதீர்த்திறத்தவரிடமிருந்து கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு ஒரு பங்குபற்றுநருக்கு, ஒரு கணக்குத் தீர்வுமனைக்கு அல்லது ஒரு

மத்திய எதிர்த்திறத்தவருக்கு உள்ள உரிமை, தேறிய தாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், தேறிய கொடுத்துத்தீர்த்தல் அல்லது முடித்துக்காட்டும் தொகை ஒன்று, விதிகளில் அவ்வாறு ஏற்பாடு செய்யப்படின், பெயர் குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையின் கொடுத்துத்தீர்த்தல் விதிகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும் ; அத்துடன்

(iii) ஒரு பங்குபற்றுநரின், ஒரு கணக்குத் தீர்வு மனையின் அல்லது ஒரு மத்திய எதிர்த்திறத்தவரின் மத்திய வங்கியிலுள்ள கணக்கொன்றில் பதிவதன் மூலம் அல்லது அக்கணக்கிலிருந்தான கொடுப்பனவொன்றின்மூலம் கொடுப்பனவுக் கடப்பாடொன்றைக் கொடுத்துத் தீர்த்தலானது இறுதியானதும் இல்லாதொழிக்கப்படற்பாலதல்லாததுமெனப் பெயர்குறிக்கப்பட்ட கணக்குத் தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையின் கொடுத்துத் தீர்த்தல் விதிகள் ஏற்பாடுசெய்யுமிடத்து, அப்பதிவு அல்லது கொடுப்பனவு எதிர்மாறாக்கப்படுதலோ, திருப்பிக்கொடுக்கப்படுதலோ அல்லது எதிரிட்டு நீக்கப்படுதலோ ஆகாது.

(2) பெயர் குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையொன்றில் கொடுப்பனவுக் கடப்பாடொன்றைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு ஒரு பங்குபற்றுநரின், ஒரு கணக்குத் தீர்வு மனையின் அல்லது ஒரு மத்திய எதிர்த்திறத்தவரின் மத்திய வங்கியிலுள்ள கணக்கிலான பதிவொன்று அல்லது அக்கணக்கிலிருந்தான கொடுப்பனவொன்று, அச்செயற்பாட்டை நிறுத்தி வைக்கின்றதாகத் தொழிற்படுகின்ற ஏதேனும் ஏற்பாட்டின் அல்லது கட்டளையின் விடயப் பொருளாதலுமாதலாகாது.

(3) பெயர் குறிக்கப்பட்ட கணக்குத் தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையிலான கொடுப்பனவொன்றுக்கான பிணைப் பொறுப்பொன்றாக அல்லது உறப்பட்ட கடப்பாடொன்றின் புரிகைக்காக அதற்கு அளிக்கப்படும் துணைப்பொறுப்புத் தொடர்பில் ஒரு பங்குபற்றுநரின், ஒரு கணக்குத் தீர்வு, மனையின், ஒரு மத்திய எதிர்த்திறத்தவரின் அல்லது மத்திய வங்கியின் உரிமைகளும் பரிகாரங்களும், கடனிறுக்கவகையறவு வழக்கு

நடவடிக்கைளினாற் பாதிக்கப்படாதிருக்கலாம், குறிப்பாக, அத்தகைய உரிமைகளும் பரிகாரங்களும், துணைப்பொறுப்புத் தொடர்பில் உண்மைகளையும் பரிகாரங்களையும் பிரயோகிப்ப தற்குக் கடன்கொடுநர்களுக்குள்ள இயலுமாந்தன்மையைப் பாதிக்கின்ற ஏதேனும் நிறுத்திவைத்தல் ஏற்பாட்டின் அல்லது கட்டளையின் விடயமாகாதிருக்கலாம்.

(4) பெயர்குறிக்கப்பட்ட கணக்குத் தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையொன்றின் நிருவாகத்தினது அல்லது தொழிற்பாட்டின் முழுமையும் அல்லது அதன் பாகம் இலங்கைக்கு வெளியே நடாத்தப்படுகின்றது அல்லது அதன் கொடுத்துத்தீர்த்தல் விதிகள் ஒரு வெளிநாட்டு நியாயாதிக்கத்தின் சட்டங்களினால் ஆளப்படுகின்றன என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையின் தொழிற்பாட்டிலிருந்து அல்லது அது சம்பந்தமாக எழுகின்ற எவரேனுமாளின் உரிமைகளும் கடப்பாடுகளும் முழுமையாக அல்லது பகுதியளவில் இலங்கைச் சட்டத்தினால் ஆளப்படுகின்றன என இலங்கையிலுள்ள நீதிமன்றமொன்று தீர்மானித்தால், இப்பிரிவின் ஏற்பாடுகள் அவ்வுரிமைகளையும் கடப்பாடுகளையும் தீர்மானிப்பதில் இலங்கைச் சட்டம் ஏற்புடையதாகவுள்ள அத்தகைய அளவுக்கு அதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) இப்பிரிவில், "கொடுத்துத்தீர்த்தல் விதிகள்" என்பது, எந்த அடிப்படையின்மீது கொடுப்பனவுக் கடப்பாடுகள் கணக்கிடப் படுகின்றனவோ, தேறியதாக்கப்படுகின்றனவோ அல்லது கொடுத்துத்தீர்க்கப்படுகின்றனவோ அந்த அடிப்படையை ஏற்பாடுசெய்கின்ற, எவ்வாறாயினும் ஆக்கப்பட்ட பயனுள்ள விதிகள் என்று பொருளாகும் என்பதுடன், பங்கு பற்றுநரொருவர், முறையே கணக்குத்தீர்வு மனைக்கான, மத்திய எதிர்த்திறத்தவருக்கான அல்லது ஏனைய பங்குபற்றுநர்களுக்கான அவரின் கடப்பாடுகளை எதிர்நோக்குவதற்குத் தவறுகின்றவிடத்து அல்லது இயலாதவராகவரக்கூடிய சாத்தியமுள்ளவிடத்து வழக்குத் தொடுப்பதற்கான விதிகளையும் உள்ளடக்கும்.

அறிவித்தல்களும் தகவலும்.

**25.** (1) கணக்குத்தீர்வு மனையொவ்வொன்றும், அதன் பெயர் குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமை தொடர்பில், பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும்

கொடுத்துத் தீர்த்தல் முறைமை தொடர்பாகக் கணக்குத்தீர்வு மனையினால் செய்வதற்கு உட்கருதப்படும் ஏதேனும் குறிப்பிடத் தக்க மாற்றம்பற்றி முன்கூட்டியே நியாயமான அறிவித்தலை மத்திய வங்கிக்கு வழங்குதல் வேண்டும். மேற்போந்தவற்றின் பொதுமையை வரையறுக்காது, கணக்குத்தீர்வு மனை, பின்வருவனவற்றைப் பாதிக்கும் ஏதேனும் மாற்றம் தொடர்பில் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் :—

(i) அதன் அமைப்புப் புறவிதியுட்பட்ட ஏதேனும் ஆவணமும், கணக்குத்தீர்வு மனையை உருவாக்குதல், தாபித்தல், அமைத்தல், ஆளுதல், நிருவாகம் மற்றும் தொழிற்படுத்தல் தொடர்பாக இயைபான தீர்மானங்களும், உடன்படிக்கைகளும், விதிகளும், நடவடிக்கை முறைகளும் ;

(ii) பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையின் தொழிற்பாடு ; அல்லது

(iii) பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையை ஆளுகின்ற உடன்படிக்கைகளும், விதிகளும், நடவடிக்கைமுறைகளும், வழிகாட்டு நெறிகளும் அல்லது வேறு ஆவணப்படுத்தலும்.

(2) கணக்குத்தீர்வு மனை ஒவ்வொன்றும், பெயர் குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைதொடர்பாக வேறேதேனும் மாற்றத்தை அது செய்த பின்னர் உடனடியாக, அம்மாற்றம் பற்றிய எழுத்திலான அறிவித்தலை மத்திய வங்கிக்கு வழங்குதல் வேண்டுமென்பதுடன், மேற்போந்தவற்றின் பொதுமையை வரையறுக்காது. பின்வருவனவற்றைப் பாதிக்கும் ஏதேனும் மாற்றம் தொடர்பிலான தகவலை அவ்வறிவித்தலானது வழங்குதலும் வேண்டும் :—

(i) பதவிவிலகல் மூலம் அல்லது வேறுவகையாக, பணிப்பாளர் சபையின் அமைப்பு ; அல்லது

(ii) கணக்குத்தீர்வு மனையின் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர்.

(3) ஒவ்வொரு கணக்குத்தீர்வு மனையும், அதன் பெயர்குறிக் கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமை தொடர்பில் மத்தியவங்கி எழுத்தில் தேவைப்படுத்தக்கூடிய வாறான அத்தகைய தகவலை, அத்தகைய நேரங்களிலும் அத்தகைய படிவத்திலும் மத்திய வங்கிக்கு வழங்குதல் வேண்டும்.

*மத்திய வங்கியினாலான கணக்காய்வுகளும் பரிசோதனைகளும்.*

**26.** (1) மத்திய வங்கியானது, இவ்வத்தியாயத்தின்கீழ் அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, ஒரு கணக்குத்தீர்வு மனையின் கணக்காய்வையும் பரிசோதனைகளையும் நடாத்த லாம்.

(2) மத்திய வங்கியானது, அவசியமானதென அது கருதுகின்றவிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழான கணக்காய்வுகளும் பரிசோதனைகளும், தகைமைபெற்ற கணக்காய்வாளர்களினால், முழுமையாக அல்லது பகுதியளவில் அதன்சார்பில் நிறைவேற் றப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், அவர்கள் தமது அறிக்கையை மத்திய வங்கியிடம் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(3) மத்திய வங்கியும், கணக்காய்வுகளையும் பரிசோதனை களையும் நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்படும் ஒவ்வொரு தகைமை பெற்ற கணக்காய்வாளரும், கணக்குத்தீர்வு மனையின் தகவல், புத்தகங்களை மற்றும் பதிவேடுகள் என்பவற்றைப் பார்வையிடு வதற்கு உரித்துடையோராதல் வேண்டும். கணக்குத் தீர்வு மனையானது, இப்பிரிவின் கீழ் மத்திய வங்கியானது அல்லது தகைமைபெற்ற கணக்காய்வாளரானவர் அதன் அல்லது அவரின் கடமைகளை நிறைவேற்றுவதில் அதற்கு அல்லது அவருக்குத் துணைபுரிதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "தகைமைபெற்ற கணக்காய் வாளர்" என்பது, அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையி லுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழான கணக்காய்வு அல்லது பரிசோதனை தொடர்பாகச் சத்தியத்தின்கீழான சான்றைப் பெறுகின்ற நோக்கத்துக்காக, மத்திய வங்கியானது, (17 ஆம் அத்தியாயமான) சத்தியங்கள் கட்டளைச் சட்டத்தினது ஏற்பாடுகளின் நியதிகளின் படி சத்தியங்களை அல்லது உறுதியுரைகளை எடுத்தோது வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

*கணக்குத்தீர்வு முறைமை தொடர்பாக மத்திய வங்கிக்குள்ள தத்துவங்கள்.*

**27.** கணக்குத் தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமை தொடர்பாகவும் அதன் கணக்குத்தீர்வு மனை தொடர்பாகவும், மத்திய வங்கியானது, பின்வரும் காரியங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் செய்வதற்கான தத்துவத்தைக் கொண்டிருக்கலாம் :

(i) ஒரு நட்டப்பகிர்வுப் வழிமுறை உள்ளடங்கலாக, ஒரு பங்குபற்றுநராகவிருத்தலும், பங்குபற்றுதலும், மத்திய எதிர்த்திறத்தவரொருவராகச் செயலாற்றுதலும் ;

(ii) நிதிச் சொத்துக்களின் கட்டுக்காப்பாளரொருவராக அல்லது கொடுத்துத்தீர்த்தல் முகவராக அல்லது இவை இரண்டுமாகச் செயலாற்றுதலும் ; அத்துடன்

(iii) ஒரு கணக்குத்தீர்வு மனையிலிருந்தான, ஒரு பங்குபற்றுநரிடமிருந்தான அல்லது மத்திய எதிர்த்திறத்தவரிடமிருந்தான வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதலும் அவற்றின்மீதான வட்டியைச் செலுத்தலும்.

*வலைப்பின்னலுக்குட்படுத்தல் உடன்படிக்கைகளை முடிவுறுத்தல்.*

**28.** நிதிநிறுவனமொன்று அல்லது மத்திய வங்கி ஒரு தேறிய தாதல் உடன்படிக்கையொன்றுக்குத் திறத்தவராக வுள்ளவிடத்து, அப்போது வங்கிமுறிவு அல்லது கடனிறுக்கவகையறவு தொடர்பாக வேறேதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பி னும் அல்லது நிருவாக அல்லது மீள் ஒழுங்குபடுத்துகை ஒழுங்கேற்பாடொன்றைப் பின்பற்றி ஆக்கப்படும் ஏதேனும் நீதிமன்றக் கட்டளை, அல்லது கடனிறுக்கவகையறவை உட்படுத்துகின்ற பெறுநர் தத்துவம் எவ்வாறிருப்பினும், அந்நிதிநிறுவனம் அல்லது மத்திய வங்கி உடன்படிக்கையை வலுவுறுத்தலாம், அதனால் ஆளப்படும் ஏதேனும் கடப்பாட்டை விளைவிக்கின்ற ஒப்பந்தத்தை முடிவுறுத்தலாம், அத்துடன் உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தேறிய முடிவுறுத்தற் பெறுமதியை அல்லது தேறிய கொடுத்துத் தீர்த்தல் தொகையைத் தீர்மானிக்கலாம், இவ்வாறான விடயத்தில், தேறிய முடிவுறுத்தற் பெறுமதிக்கு அல்லது தேறிய கொடுத்துத்தீர்த்தல் தொகைக்கு உரித்துள்ள திறத்தவர், விடயத்துக்கேற்ப, அப்பெறுமதிக்காக அல்லது தொகைக்காகத் தேறிய முடிவுறுத்தற் பெறுமதியை அல்லது தேறிய கொடுத்துத்தீர்த்தல் தொகையைச் செலுத்தவேண்டிய திறத்தவரின் கடன்கொடுநராக விருப்பார்.

கணக்குத் தீர்வுமுறைமை யொன்று உள்ளமை பற்றிய எண்பிப்பை மத்தியவங்கி தேவைப் படுத்தலாம்.

**29.** *(1)* மத்திய வங்கியானது, கொடுப்பனவுக் கடப்பாடுகளைக் கணக்குத் தீர்வு செய்வதற்காகவும் மற்றும் கொடுத்துத் தீர்ப்ப தற்காகவும் ஒரு முறைமை அல்லது ஒழுங்கேற்பாடு உள்ளதென நம்புவதற்கு அதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமை உள்ளமை பற்றிய தீர்மானமொன்றைச் செய்வதற்கென, மத்தியவங்கி தேவைப்படுத்தக்கூடியவாறாக அம்முறைமை அல்லது ஒழுங்கேற் பாடுதொடர்பான மேலதிகத் தகவலையும், பதிவேடுகளையும், ஆவணங்களையும் மத்திய வங்கிக்கு வழங்கும்படி அம்முறை மைக்கு அல்லது ஒழுங்கேற்பாட்டுக்குத் திறத்தவரொருவராக வுள்ள ஆளொருவருக்கு வேண்டுகோள் விடுக்கலாம்.

*(2)* தகவலையும், பதிவேடுகளையும், ஆவணங்களையும் வழங்கும்படி *(1)* ஆம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்படும் ஆளொவ்வொருவரும், அத்தகைய வேண்டுகோளுக்கு இணங்கி யொழுகுதல் வேண்டும்.

*(3)* கணக்குத் தீர்வு மனையொவ்வொன்றும், அதன் கணக்குத் தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமை தொடர்பில் கணக்குத் தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமை ஒரு நிதி முறைமையில் அபாயத்தை ஏற்படுத்துகின்றதாவென்பதை மத்திய வங்கி தீர்மானிப்பதனை இயலச் செய்வதற்கு, மத்திய வங்கி காலத்துக்குக் காலம் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலையும் ஆவணங்களையும் மத்திய வங்கிக்கு வழங்குதல் வேண்டும். மேற்போந்தவற்றின் பொதுமையை வரையறுக்காது, கணக்குத் தீர்வு மனையானது, கணக்குத் தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமை தொடர்பில் —

(அ) பங்குபற்றுநர்களின் பெயர்கள் ;

(ஆ) அமைப்புப் புறவிதி, துணைவிதிகள், இயைபான தீர்மானங்கள், உடன்படிக்கைகள், விதிகள் மற்றும் நடவடிக்கைமுறைகள் என்பன உட்பட, கணக்குத்தீர்வு மனையை உருவாக்குதல், தாபித்தல், அமைத்தல், ஆளுதல் மற்றும் தொழிற்படுத்தல் என்பன தொடர் பான எல்லா ஆவணங்களினதும் பிரதிகள் ;

(இ) கணக்குத் தீர்வுமனையின் பணிப்பாளர்கள், குழுவுறுப்பினர்கள் மற்றும் கணக்காய்வாளர்கள் என்போரின் பெயர்கள் ;

(ஈ) ஏதேனும் அரசாங்க முகவர் நிலையத்துடன் அல்லது ஒழுங்குபடுத்தல் குழுவுடன் கோப்பிடப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் அதன் அறிக்கைகள், கூற்றுக்கள் அல்லது வேறு ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகள் ; அத்துடன்

(உ) அதன் நிதிக்கூற்றுக்களின் பிரதிகள்

என்பவற்றை மத்திய வங்கிக்கு வழங்குதல் வேண்டும்.

(4) பங்குபற்றுநரெவரும், கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையொன்றின் இன்னொரு பங்குபற்றுநர் சம்பந்தமாக இவ்வத்தியாயத்தின்கீழ் மத்திய வங்கிக்கான தகவலை, அத்தகவல் எல்லாப் பங்குபற்றுநர்களுக்கும் கிடைக்கக் கூடியதாக் கப்பட்டிராவிடன், வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படமாட்டார்.

பங்கு பற்றுநர்களின் பொறுப்பு.

**30.** (1) கணக்குத்தீர்வு மனையொன்று அதன் கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைதொடர்பில், இவ்வத்தியாயத்தின்கீழ் அதன்மீது சுமத்தப்பட்ட கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறுமிடத்து, அல்லது இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளை வேறுவகையாக மீறுமிடத்து, பங்குபற்றுநர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் அக்கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன், கணக்குத் தீர்வு மனையைப் போன்று, அதே முறையிலும் அதே அளவுக்கும் அக்கடப்பாடுகளை மீறியமைக்கா பொறுப்பாதலும் வேண்டும்.

(2) கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையொன்று இலங்கையில் அமைந்துள்ள கணக்குத்தீர்வு மனையொன்றைக் கொண்டிராதவிடத்து, இலங்கையில் அமைந்துள்ள பங்குபற்றுநர்கள் முறையே அக்கடப்பாடுகளும் உரிமைகளும் சுமத்தப்படும் அல்லது அளிக்கப்படும் கணக்குத்தீர்வு மனையென்றாற்போன்று அதேமுறையிலும் அதே அளவுக்கும்,

(i) ஒரு கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமை தொடர்பில் இவ்வத்தியாயத்தின்கீழ் கணக்குத் தீர்வு மனையொன்றின்மீது சுமத்தப்படும் கடப்பாடுக ளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் ; அத்துடன்

(ii) ஒரு கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமை தொடர்பில் இவ்வத்தியாயத்தினால் கணக்குத் தீர்வு மனையொன்றுக்கு அளிக்கப்படும் எல்லா உரிமை களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கணக்குத்தீர்வு மனைதொடர்பில் மத்திய வங்கியினால் எடுக்கப் படும் ஏதேனும் நடவடிக்கை, இலங்கையில் அமைந்துள்ள பங்கு பற்றுநர்கள் தொடர்பில் மட்டுமே எடுக்கப்படலாம்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, இலங்கையில் ஏற்புடையற் பாலதான ஒரு சட்டத்தின்கீழ் பங்குபற்றுநரொருவர் கூட்டிணைக் கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட, இலங்கையில் அமைந்துள்ள வராகச் சொல்லப்படுவார்.

வெளிநாட்டு வங்கிகளின் பங்குபற்றுகை.

**31.** பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையிலுள்ள பங்குபற்றுநரொருவராகவுள்ள அல்லது இருப்பதற்கு விரும்புகின்ற வெளிநாட்டு வங்கியொன்று, காலத்துக்குக்காலம், மத்திய வங்கி அவசியமெனக் கருதுகின்ற வாறாக வெளிநாட்டு வங்கிக்கு வெளிநாட்டுச் சட்டங்கள் ஏற்புடையதாகின்றமை தொடர்பான ஏதேனும் தகவலை மத்திய வங்கிக்கு வழங்குதல் வேண்டும்.

V ஆம் அத்தியாயத் திற்கான பொருள் கோடல்.

**32.** இவ்வத்தியாயத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய —

“மத்திய எதிர்த்திறத்தவர்” என்பது, ஒவ்வொரு பங்குபற்று நருக்கும் மத்திய எதிர்த்திறத்தவருக்கிடையே செலுத்தப் படவேண்டியதாகவுள்ள தனியொரு தொகையை விளை விப்பதற்குக் கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையில் சம்பந்தப்பட்டுள்ள எந்தக் கூட்டுத்தாப னத்துடன், கழகத்துடன், பங்குடைமையுடன், முகவர் நிலையத்துடன் அல்லது வேறு சேவை வழங்குநருடன் அல்லது ஆளுடன் பங்குபற்றுநர்களின் எல்லாக் கொடுப்பனவு உரிமைகளும் கடப்பாடுகளும் வலைப்

பின்னலுக்குட்படுத்தப்பட்டுள்ளனவோ அந்தக் கூட்டுத் தாபனம், கழகம், பங்குடைமை, முகவர் நிலையம் அல்லது வேறு சேவை வழங்குநர் அல்லது ஆள் என்று பொருளாகும் ;

"கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமை" என்பது, ஏதேனும் நாணயத்தில், நிதிசார் முறைமையிலுள்ள கொடுப்பனவுக் கடப்பாடுகளைக் கணக்குத்தீர்வு செய்வதற்கானதும் அத்துடன் கொடுத்துத்தீர்ப்பதற்கானதும், பங்குபற்றுநர்களுள் ஆகக்குறைந்தது ஒருவராவது நிதிநிறுவனமொன்றாகவுள்ள ஆகக்குறைந்தது மூன்று பங்குபற்றுநர்களைக் கொண்டிருக்கின்றதுமான ஒரு முறைமை அல்லது ஒழுங்கேற்பாடு என்று பொருளாகும் ; அத்துடன் இலங்கையின் அலுவலக முறையான நாணயத்தில் கணக்குத்தீர்வு செய்வதற்காக அல்லது கொடுத்துத்தீர்ப்பதற்காக அல்லது பிணையக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து அல்லது வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து அல்லது வேறு கொடுக்கல்வாங்கல்களிலிருந்து அல்லது நிதிசார் ஒப்பந்தங்களிலிருந்து எழுகின்ற கொடுப்பனவுக் கடப்பாடுகளை அம்முறைமை அல்லது ஒழுங்கேற்பாடு கணக்குத் தீர்வு செய்யுமிடத்து அல்லது கொடுத்துத் தீர்க்குமிடத்து, அக்கொடுக்கல் வாங்கல்களுக்கானதும் ஒப்பந்தங்களுக்கானதுமான ஒரு முறைமையையும் அல்லது ஒழுங்கேற்பாட்டையும் உள்ளடக்கும் ;

"கணக்குத்தீர்வு மனை" என்பது, ஒரு கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைக்குக் கணக்குத்தீர்வு அல்லது கொடுத்துத்தீர்த்தல் சேவைகளை வழங்குகின்ற ஒரு கூட்டுத்தாபனம், கழகம், பங்குடைமை, முகவர் நிலையம் அல்லது ஒழுங்கமைப்பு அல்லது வேறு உருவகம் அல்லது ஆள் என்று பொருளாகும், ஆனால் மத்திய வங்கியை உள்ளடக்காது ;

"பெயர்குறிக்கப்பட்ட கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமை" என்பது, இவ்வத்தியாயத்தின்கீழ் பெயர்குறிக்கப்பட்ட ஒரு கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமை என்று பொருளாகும் ;

"நிதிநிறுவனம்" என்பது –

(i) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று ;

(ii) இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக நிதிநிறுவனமொன்றாகவிருப்பதற்கு மத்திய வங்கியினால் பெயர்குறிக்கப்படுகின்ற நிதிச் சேவைகளை வழங்கும் தொழிலில் முதற்கண்ணாக ஈடுபடுகின்ற அத்தகைய வேறு ஆள் அல்லது உருவகம் அல்லது ஆட்களின் அல்லது சேவை வழங்குவோரின் வகுப்பொன்றினுள் உள்ள ஆள் அல்லது உருவகம்,

என்று பொருளாகும் :

"நிதிசார் முறைமை" என்பது, இலங்கையின் நிதிசார் முறைமை என்று பொருளாகும் ;

"தேறிய முடிவுறுத்தற் பெறுமதி" என்பது, தேறியதலுக்கான உடன்படிக்கையொன்றின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய உடன்படிக்கைக்கான திறத்தவர்களிடையேயான கடப்பாடுகளை எதிரிட்டு நீக்கியபின்னர் அல்லது வேறுவகையாக தேறிய பின்னர் பெறப்படும் தேறிய தொகை என்று பொருளாகும் ;

"தேறியது உடன்படிக்கை" என்பது, கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தற்போதைய அல்லது எதிர்கால உண்மைகளுக்கெதிராகக் கொடுப்பனவுகளைச் செய்வதற்குத் தற்போதைய அல்லது எதிர்காலக் கடப்பாடுகளை தேறியதாக்குவதற்கு அல்லது எதிரிட்டு நீக்குவதற்கு ஏற்பாடுசெய்கின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிதி நிறுவனங்ளுக்கிடையேயான அல்லது மத்திய வங்கிக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிதிநிறுவனங்களுக்கிடையேயானதும் உடன்படிக்கை என்று பொருளாகும் ;

"பங்குபற்றுநர்" என்பது, ஒரு கணக்குத்தீர்வு மனையின் உறுப்பினரொருவர் அல்லது கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையொன்றைத் தாபிக்கின்ற ஒழுங்கேற்பாடொன்றுக்கான திறத்தவர் என்று பொருளாகும் ;

"இலங்கையின் நிதிசார் முறைமையில் அபாயம்" என்பது ஒரு கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையில் பங்குபற்றுநரொருவரின் கடப்பாடுகள் செலுத்தப் படவேண்டியவையாக வரும்போது அவரின் கடப்பாடுகளைப் பூர்த்தியாக்குவதற்கு அவர் இயலாதிருக்கும் அபாயம் அல்லது கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமையொன்றினுள் நிதிசார் பிரச்சினைகளை அனுப்புவதன்மூலம் –

(i) கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையிலுள்ள ஏனைய பங்குபற்றுநர்கள், அவர்களின் கடப்பாடுகள் செலுத்தவேண்டியனவாக வருகின்றபோது அவற்றைப் பூர்த்தியாக்குவதற்கு இயலாதவர்களாக விருப்பதனை ;

(ii) இலங்கையின் நிதிசார் முறைமையின் ஏனைய பாகங்களிலுள்ள நிதிநிறுவனங்கள், அவற்றின் கடப்பாடுகள் செலுத்தவேண்டியனவாக வரும்போது அவற்றைப் பூர்த்தியாக்குவதற்கு இயலாதிருப்பதனை ; அல்லது

(iii) கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையின் கணக்குத்தீர்வு மனை அல்லது இலங்கையின் நிதிசார் முறைமையினுள் உள்ள இன்னொரு கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமை, அவற்றின் கடப்பாடுகள் செலுத்தப்படவேண்டியனவாக வரும்போது அவற்றைப் பூர்த்தியாக்குவதற்கு இயலாதிருப்பதனை

விளைவிக்கக்கூடிய ஒரு கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைக்கான இடைத்தடங்கல் என்று பொருளாகும்.

## பாகம் III

### இலத்திரன்முறைக் காசோலை முன்வைப்பு

கொடுப்பனவுக் காகக் காசோலை களின் இலத்திரன் முறை முன்வைப்பு.

**33.** (1) வங்கியாளரொருவர், கொடுப்பனவுக்காகக் காசோலையை முன்வைப்பதற்குப் பதிலாக, அதன் தோற்றமொன்றைக் காசோலையின் விதிக்கப்பட்ட இலத்திரன்முறைக் கொடுப்பனவுத் தகவலுடன் சேர்த்து அனுப்புவதன்மூலம், காசோலையொன்று எந்த வங்கியாளரின் பெயரில் வரையப்படுகின்றதோ அந்த வங்கியாளருக்குக் கொடுப்பனவு செய்யப்படுவதற்காக இலத்திரனியல்முறை வழியாக அதனை முன்வைக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் காசோலையொன்றின் இலத்திரன் முறை முன்வைப்புச் செய்வதில், வங்கியாளர் ஒருவர், இன்னுமொரு வங்கியாளர் அல்லது கணக்குத்தீர்வுமனை உட்பட, மூன்றாம் திறத்தவரான சேவைவழங்குபவர்மூலமாக முழுமையாக அல்லது பகுதியளவில் செயலாற்றலாம் என்பதுடன், அத்தகைய சேவை வழங்குபவர் வங்கியாளருக்கான முகவராகவும் கருதப்படுகின்றார்.

(3) ஒராம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்துடன் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, எந்த வங்கியாளரின் பெயரில் காசோலையொன்று வரையப்படுகின்றதோ அத்துடன் எந்த வங்கியாளருக்கு இலத்திரன்முறை முன்வைப்புச் செய்யப்படுகின்றதோ அவ்வங்கியாளர், காசோலையின் கொடுப்பனவுக்காக அக்காசோலையையே முன்வைக்கும்படி முன்வைக்கின்ற வங்கியாளருக்கு வேண்டுகோள்விடுக்கலாம்.

(4) ஒன்றில் (1) ஆம் உட்பிரிவின்கீழான இலத்திரன்முறை முன்வைப்பு தடைசெய்யப்பட்டவிடத்து அல்லது முழுமையாக வேலை செய்யாதொழிந்துள்ளவிடத்து, அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழான செல்லுபடியுள்ள வேண்டுகோளொன்று செய்யப்படுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழான முன்வைப்பு புறக்கணிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், காசோலையையே அடுத்துப் பின்னர் முன்வைப்பதற்கு இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலுமாகாது. காசோலையின் அடுத்துப்பின்னரான முன்வைப்பு உரிய நேரத்தில் செய்யப்பட்டுள்ளதெனக் கருதப்படுவதற்காக, முன்வைக்கின்ற வங்கியாளர், ஒன்றில் (3) ஆம் உட்பிரிவின்

கீழ் வேண்டுகோளைப் பெற்ற நேரத்தில் அல்லது விடயத்துக் கேற்ப, இலத்திரன்முறை முன்வைப்பு தடைசெய்யப்பட்டது அல்லது முழுமையாக வேலை செய்யாதொழிந்துள்ளது என்பதை அறிந்திருக்கவேண்டிய நேரத்தில், காசோலையைக் கொடுப்ப னவுக்காக முன்வைப்பதற்கென அதனைப் பெற்றிருந்தாரெனக் கருதப்படுகின்றார்.

(5) மூன்றாம் உட்பிரிவின்கீழான வேண்டுகோள் ஒன்று,—

(அ) கொடுப்பனவு செய்யப்படு முன்னர் ;

(ஆ) இலத்திரன்முறை முன்வைப்பு வேலைசெய்யா தொழிந்துள்ளவிடத்து, அல்லது எந்த வங்கியாளரின் பெயரில் காசோலை வரையப்படுகின்றதோ அந்த வங்கியாளர், காசோலையை மதித்தேற்றல் செய்வதில் காசோலையை வரைந்தவரெனக் கூறப்படும் அவரது வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கி யொழுகுகின்றாரெனப் போதிய நிச்சயத்துடன் முடிபு செய்வதற்கு அவரை இயலச்செய்யாதவிடத்து ; அத்து டன்

(இ) எந்த வங்கியாளரின் பெயரில் காசோலை வரையப் படுகின்றதோ அந்த வங்கியாளர், காசோலையையே முன்வைப்பதன் அடிப்படையில் அவர் அத்தகைய முடிவுக்கு வரக்கூடிய கூடுதலான சாத்தியம் உண் டென நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண் டுள்ளவிடத்து,

மட்டுமே செல்லுபடியானமுறையில் செய்யப்படலாம் ; அத்துடன் அத்தகைய வேண்டுகோள் அதற்கான ஏதுக்கள் பற்றிய விளக்கத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கக் காசோலையின் இலத்திரன்முறை முன்வைப்புச் செய்யப்படும் நாளை அடுத்து வரும் நாளன்று கொடுக்கல்வாங்கல்கள் முடிவுறு முன்னர், முன்வைக்கின்ற வங்கியாளரைச் சென்றடைதலும் வேண்டும்.

(6) காசோலையயே முன்வைப்பதற்காக (3) ஆம் உட்பிரிவின்கீழான செல்லுபடியான வேண்டுகோளொன்று, மட்டும், கொடுப்பனவு செய்யாமையினால் காசோலை மதித்தேற்றல் செய்யப்படாமையாகக் கருதப்படுதலாகாது.

(7) ஐயத்தைத் தவிர்ப்பதற்தாக, காசோலையின் தோற்றமொன்றையும் இலத்திரன்முறைக் கொடுப்பனவுத் தகவலையும் அனுப்புவதன்மூலம் (1) ஆம் உட்பிரிவுக்கிணங்க முன்வைப்புச் செய்யப்படுவதன்மேல் செய்யப்படும் ஏதேனும் கொடுப்பனவு, தொழிலின் சாதாரணநெறிக்கு வெளியே, தீய எண்ணத்துடன் அல்லது அசட்டையாகச் செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுலாகாது எனக் கூறப்படுகின்றது.

(8) இப்பிரிவின் நோக்கங்களுக்காக -

(அ) ஒரு காசோலையின் தோற்றம் காசோலையின் முற்புறத்தையும் பிற்புறத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஒரு காசோலையின் இலத்திரன்முறைக் கொடுப்பனவுத் தகவல் -

(i) காசோலையின் தொடர் எண்ணையும் ;

(ii) காசோலை எந்த வங்கியாளரின் பெயரில் வரையப்பட்டதோ அந்த வங்கியாளரை அடையாளங்காணும் குறியீட்டையும் ;

(iii) காசோலையை வரைபவரின் கணக்கிலக்கத்தையும் ;

(iv) காசோலையை வரைபவரினால் பதியப்பட்டவாறு, காசோலை எத்தொகைக்காக வரையப்பட்டதோ அத்தொகையையும் ; அத்துடன்

(v) காலத்துக்குக்காலம் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் கருமத்தையும் ;

கொண்டிருத்தல் வேண்டும்.

*இலத்திரன் முறையில் முன்வைக்கப்பட்ட காசோலைக்குக் கொடுப்பனவு செய்யப்படாமை மீதான நடவடிக்கை முறை.*

**34.** (1) முப்பத்திமூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கிணங்கக் கொடுப்பனவுக்காக முன்வைக்கப்பட்ட காசோலையொன்று கொடுப்பனவு செய்யப்படாமையினால் மதித்தேற்றல் செய்யப் படாதவிடத்து, காசோலையை வைத்திருப்பவர், பெறுகைக்காக எந்த வங்கியாளரிடம் காசோலையை ஒப்படைடத்தாரோ அந்த வங்கியாளர் ஒன்றில் காசோலையை வைத்திருப்பவருக்கு அதனைத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும் அல்லது மத்திய வங்கியினால் தரப்பட்டுள்ள எல்லாத் தேவைப்பாடுகளுக்கும் இசைந்தொழுகுகின்ற தோற்றம் கொணரப்பெறு ஆவண மொன்றை வைத்திருப்பவருக்கு வழங்குதல் வேண்டும்.

(2) தோற்றம் கொணரப்பெறு ஆவணமொன்று, அது எந்தக் காசோலையுடன் தொடர்புபட்டதோ அந்தக் காசோலையாக விருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*கட்டுறுத்துகளும் நட்டோத்தர வாதமும்.*

**35.** (1) முப்பத்திமூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி இலத்திரன்முறை முன்வைப்பொன்றைச் செய்கின்ற வங்கியாளரொருவர், தோற்றமானது மூலக் காசோலையின் உண்மையான, பூரணமான மற்றும் செம்மையான தோற்றமென்றும், விதிக்கப்பட்ட இலத்திரன்முறைக் கொடுப்ப னவுத் தகவல், காசோலையிலுள்ளவாறானதைப்போன்று இருக்கின்றதென்றும் கட்டுறுத்துகின்றார். காசோலையையே முன்வைப்பதற்குப் பதிலாக இலத்திரன்முறை வழிவகைகள்மூலம் முன்வைப்புச் செய்யப்படும் காரணமாக உறப்படும் ஏதேனும் நட்டத்துக்கெதிராக அவர், வரைபவருக்கு நட்டோத்தரவாதம் அளித்தலும் வேண்டும்.

(2) முப்பத்திநான்காம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நிதிகளின்படி தோற்றம் கொணறப்பெறு ஆவணமொன்றை வழங்குகின்ற வங்கியாளரொருவர், அது எக்காசோலையுடன் தொடர்புபட்டதோ அக்காசோலையின் உண்மையான பிரதியாக வுள்ளதெனக் கட்டுறுத்துகின்றாரென்பதுடன், காசோலை மீதே பணம் செலுத்தப்படும் வழக்குத் தொடுக்கப்படும்பட்சத்தில் ஏதேனும் நட்டத்துக்கெதிராக வரைபருக்கு நட்டோத்தரவாத மளித் தலும் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் உத்தரவாதமளிக்கப்படும் கட்டுறுத்துகளும் நட்டோத்தரவாதங்களும், காசோலை எந்த வங்கியாளரின் பெயரில் வரையப்பட்டதோ அந்த வங்கியாளரினதும் காசோ

லையை வரைபவர் எனக் கூறப்படும் அதன் வாடிக்கை யாளரினதும், முன்வைக்கின்ற வங்கிக்குப் பெறுகைக்காகக் காசோலையை ஒப்படைத்து வைத்திருப்பவரினதும், எவரேனும் முன்னைய புறக்குறிப்பிடுநரினதும் சார்பாகவுள்ளன.

(4) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், காசோலையை வரைபவரெனக் கூறப்பட்ட ஆள், இப்பிரிவின் கீழான கட்டுறுத்துகளின் அல்லது நட்டோத்தரவாதத்தின் முறிவின்மேல், அறவிடலாம் என்பதுடன், காசோலை எந்த வங்கியாளரின் பெயரில் வரையப்படுகின்றதோ அந்த வங்கியாள ரிடமிருந்து நேரடியாக உரிமைகோரலாம் கட்டுறுத்துகளைச் செய்கின்ற அல்லது நட்டோத்தரவாதக் கடப்பாட்டின்மீது ஆளாக வுள்ள வங்கியாளருக்கெதிராக அவ்வாளின் கோரிக்கைக்கு அவர் பின்னர் மாற்றீடு செய்யவும்படலாம்.

நாணய மாற்றுண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் குறித்தசில ஏற்பாடுகள் ஏற்புடையன வாகா.

**36.** (1) (82 ஆம் அத்தியாயமான) நாணயமாற்றுண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின் 52 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் –

(அ) 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுப்பனவுக்காகக் காசோலையொன்றை முன்வைப் பதற்கும் ;

(ஆ) 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான முன் வைப்பைத் தொடர்ந்து செலுத்தப்படும் காசோலை யொன்றுக்கும்,

ஏற்புடையனவாதலாகாது.

(2) முப்பத்திமூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வங்கியாளரொருவரினால் காசோலையொன்று கொடுப்பன வுக்காக முன்வைக்கப்படுமிடத்து, (82 ஆம் அத்தியாயமான) நாணயமாற்றுண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்புடையற்பாலனவாகவும் அலுவலக நாளொன் றில் தகுந்த இடத்தில் அல்லது நியாயமானவொரு நேரத்தில் முன்வைப்புச் செய்யப்படுவதனைத் தேவைப்படுத்துகின்றனவாக வும் பொருள்கொள்ளப்படுதலாகாது.

(3) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள், அது சாத்தியப் படக்கூடிய அளவுக்கு, (82 ஆம் அத்தியாயமான) நாணய மாற்றுண்டியல்கள் கட்டளைச் சட்டத்தைப்போன்றதொன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகளானவை, உடன்படிக்கை களினதும் ஒழுங்கேற் பாடுகளினதும் மேலோங்கல்.

**37.** (1) வங்கியாளர்களிடையேயான உடன்படிக்கைகள், கணக்குத்தீர்வு மனை விதிகள் அல்லது இவற்றையெல்லாம் ஒழுங்கேற்பாடுகள் என்ற வடிவத்திலானவையுட்பட்ட இப்பாகத்தில் தரப்பட்டுள்ள எல்லாக் கருமங்களினதும் செயற்பாட்டை ஆளலாமென்பதுடன், அவற்றுக்கான திறத்தவர்களைப் பிணித்தலும் வேண்டும் :

ஆயின், இச்சட்டத்தின்கீழ் அத்தகைய நோக்கங்களுக்காக மத்திய வங்கியினால் வழங்கப்படும் எவையேனும் விதிகள், பணிப்புகள் அல்லது நெறிவுறுத்தல்கள், விடயத்துக்கேற்ப அத்தகைய எவையேனும் உடன்படிக்கைகளையும் அல்லது ஒழுங்கேற் பாடுகளையும் மேலோங்கல் வேண்டும்.

(2) இப்பாகத்தின் செயற்பாடு தொடர்பான விதிகளும் பணிப்புகளும், நெறிவுறுத்தல்களும், அவர்களினால் ஆளப்படும் காசோலையொன்றின்மீது வகைசொல்லவேண்டியவர்களும் அதனை வலுவுறுத்துவதற்கு உரித்துடையவர்களுமான திறத்தவர் களைப் பிணிப்பனவாகவும் அவர்களுக்கு நன்மைபயப்பனவாக வும் கருதப்படுகின்றன.

## பாகம் IV

### நானாவித ஏற்பாடுகள்

சட்டம் முதலியவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்கி யொழுகத் தவறும் விடயத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை.

**38.** இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதிக்கு அல்லது மேற்போந்த ஏற்பாடுகள் தொடர்பான ஏதேனும் கருமம் சம்பந்தமாக மத்திய வங்கியினால் வழங்கப்படும் ஒரு பணிப்புரைக்கு, பணிப்புக்கு, நெறிவுறுத்தலுக்கு, அல்லது விதிக்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் நெறிப்படுத்தப்படும் தகவல், பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் என்பவற்றுக்கான சட்டமுறையான வேண்டுகோளுக்கு எவரேனுமாள் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, மத்திய வங்கி, விடயத்துக்கேற்ப, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒழுங்குவிதிக

ளுக்கு, விதிகளுக்கு, நெறிவுறுத்தலுக்கு, பணிப்புரைக்கு அல்லது வேண்டுகோளுக்கு இணங்கியொழுகுமாறு பணிக்கின்ற கட்டளையொன்றுக்காக தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றமொன்றுக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

தவறுகள்.

**39.** *(1)* இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளை அல்லது அவ்வேற் பாடுகளின்கீழான ஏதேனும் கருமம் சம்பந்தமாக மத்திய வங்கியினால் வழங்கப்படும் பணிப்புரையை, பணிப்பை, நெறிவுறுத்தலை அல்லது விதியை, அல்லது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் தகவல் பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் என்பவற்றுக்கான சட்டமுறையான வேண்டுகோளை மீறுகின்ற அல்லது அதற்கிணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொவ்வொரு வரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்ப துடன் -

(i) இயற்கையான ஆளொருவரின் விடயத்தில், சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு அல்லது ஓராண்டுக்குக் குறையாததும் மூன்றாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும் ; அல்லது

(ii) வேறேதேனும் உருவகத்தின் விடயத்தில், சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண் டும்.

*(2)* கூட்டுத்தாபனமொன்று அல்லது தனியாள் ஒருவரல்லாத வேறேதேனும் சட்ட உருவகம், அல்லது கூட்டிணைக்கப்படாத குழு அல்லது ஒழுங்கமைப்பு, இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடு களை அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியை, மத்திய வங்கியினால் வழங்கப்படும் பணிப்புரைகளை, பணிப்புகளை, அறிவுறுத்தல்களை அல்லது விதிகளை மீறுகின்ற விடத்து, அப்போது ஒவ்வொரு பணிப்பாளரும் உறுப்பினரும்,

விடயத்துக்கேற்ப, கூட்டுத்தாபனம், சட்ட உருவகம் அல்லது கூட்டிணைக்கப்படாத குழு அல்லது ஒழுங்கமைப்பு என்பவற்றைப் போன்று அதேமுறையிலும் அதே அளவுக்கும் மீறுகைக்கு பொறுப்பாதல் வேண்டும்.

**40.** (1) மத்திய வங்கியினால் இச்சட்டத்தின்கீழ் பெறப்படும் ஏதேனும் தகவல் அல்லது எவையேனும் ஆவணங்கள் இரகசியமானவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*தகவலினதும் ஆவணங்களினதும் இரகசியத் தன்மை முதலியன.*

(2) ஓராம் உட்பிரிவிலுள்ளதெதுவும், நிதிநிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான பொறுப்புச் சுமத்தப்படும் ஏதேனும் அரசாங்க முகவர் நிலையத்தை அல்லது ஒழுங்குபடுத்தற் குழுவை, ஏதேனும் தகவலை அல்லது எவையேனும் ஆவணங்களை வெளிக்காட்டுவதிலிருந்து தடைசெய்தலாகாது ; ஆயின், தகவல் அல்லது ஆவணங்கள் எம்முகவர் நிலையத்துக்கு, எக்குழுவுக்கு அல்லது எவ்வாளுக்கு வெளிக்காட்டப்படுகின்றனவோ அம்முகவர் நிலையத்தினால், அக்குழுவினால் அல்லது அவ்வாளினால் இரகசியமானதாகக் கொள்ளப்படுமென மத்திய வங்கி திருப்திப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளில் அடங்கியுள்ளதெதுவும், ஏதேனும் தகவலை வெளிக்காட்டுமாறு மத்திய வங்கி ஒரு சட்ட நீதிமன்றத்தினால் தேவைப்படுத்தப்படின், அவ்வாறு செய்வதனைத் தடைசெய்தலாகாது.

**41.** இச்சட்டத்தின்கீழ் பிரயோகிக்கப்படவேண்டுமென அல்லது புரியப்படவேண்டுமென உட்கருதப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் எவையேனும் தத்துவங்களை கடமைகளை அல்லது பணிகளைப் பிரயோகிப்பதில் அல்லது புரிவதில் நல்லெண்ணத்துடன் சட்டமுறையாகச் செய்யப்படும் அல்லது செய்யாது விடப்படும் எதற்காகவும், மத்திய வங்கியின் பணச்சபைக்கெதிராகவோ, அல்லது அதன் உறுப்பினர்களுக்கெதிராகவோ மத்திய வங்கியின் எவரேனும் அலுவலர், ஊழியர் பணிப்பாளர் என்போருக்கெதிராகவோ, அல்லது மத்திய வங்கியின் பணிப்பின்கீழ் செயலாற்றுகின்ற எவரேனுமாளுக்கெதிராகவோ வழக்கு நடவடிக்கையெதுவும் அமைவதாதலாகாது.

*பாதிப்பின்மை.*

*நீதிமுறை மீளாய்வுக்கான விண்ணப்பம் செய்யப்படும் விடயத்தில் பெயர்குறித்தல் அல்லது பணிப்புரை எதுவும் நிறுத்திவைக் கப்படலாகாது.*

**42.** அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின் கீழான ஏதேனும் பெயர் குறித்தல் பற்றி அல்லது அதன்கீழ் வழங்கப்படும் ஏதேனும் பணிப்புரை பற்றி நீதிமுறை மீளாய்வுக்கானவொரு விண்ணப்பம் செய்யப்படும் பட்சத்தில், விண்ணப்பம் இறுதியாகக் கையாண்டு தீர்க்கப்படும்வரை, பெயர்குறித்தலின் அல்லது பணிப்புரையின் நிறுத்திவைத்தல் எதுவும் அளிக்கப்படுதலாகாது.

*ஒழுங்கு விதிகள்.*

**43.** (1) அமைச்சரானவர், இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக, விதித் துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத் தப்படும் ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத் தினால் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக் கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும், (1) ஆம் உட்பிரிவினால் அமைச்சருக்கு அளிக்கப்படும் தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :-

(அ) வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்பளித்தலும் இலங்கையில் கொடுப்பனவு முறைமைகளின் நிலை யுறுதியும் அபிவிருத்தியும் ;

(ஆ) பெயர்குறிக்கப்பட்ட கணக்குகளினதும் ஆட்களினதும் வகுதிகளிலிருந்து கொடுப்பனவுக் கட்டளைகளின் பயன்பாட்டின்மீதும், அத்தகைய பயன்பாட்டை ஆளு கின்ற நிபந்தனைகளைக் குறித்துரைத்தலுக்கும் மட்டுப் பாடுகளையும், வரையறைகளையும் அல்லது தடையை யும் விதித்தல் ;

(இ) தனிப்பட்ட அல்லது வீடுசார் மற்றும் தொழில்சாரா நோக்கங்களுக்காக முதற்கண்ணாகப் பயன்படுத்தப் படுகின்ற கணக்குகளுக்கான அல்லது கணக்குகளிலி ருந்தான கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

சம்பந்தமாக, தனியாட்களின் பொறுப்புக்கான மட்டுப்பாடுகளையும், முன்நிபந்தனைகளையும் குறித்துரைப்பதன்மூலம் அத்தகைய பொறுப்பின்மீது மட்டுப்பாடுகளை விதித்தல் ;

(ஈ) சட்டத்தின்கீழான கடமைகளைப் புரிதலானது எந்த நியமங்களினால் அளவீடு செய்யப்படலாமோ அந்த நியமங்களைத் தீர்மானித்தல் ;

(உ) திறத்தவர்களின், பங்குபற்றுநர்களின், பிணையக் கைமாற்றல்களின் அல்லது கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்களின் எல்லா அல்லது குறித்துரைக்கப்பட்ட வகுதிகளுக்காக, இச்சட்டத்தினாற் குறித்துரைக்கப்படும் ஏதேனும் நடவடிக்கைக்காக அல்லது செய்யாமைக்காக காலப்பகுதிகளை அல்லது காலக்கெடுக்களைத் தீர்மானித்தலும், திரிபுபடுத்தலும் ;

(ஊ) கணனிப் பழுதடைதல்களின் அல்லது நிதிசார் முறைமையை முழுமையாக அல்லது பகுதியளவில் பாதிக்கின்ற வேறு அவசரகால நிலைமையின் விடயத்தில் நடவடிக்கைமுறைகளையும், காலவரையறைகளை வழங்குதலையும், உரிமைகளையும் பரிகாரங்களையும் குறித்துரைத்தல் ; அத்துடன்

(எ) இச்சட்டத்தை நிருவகிப்பதிலான முழுமையான தொழிற்பாட்டுச் செலவுகளை அறவிடுவதற்கென விதிக்கப்படக்கூடிய கட்டணங்களையும் அறவிடப்பட வேண்டிய இறுப்பனவுகளையும் தீர்மானித்தல்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், கசெற்றில் அது வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும், அவ்வாறு அங்கீகரிக்கப்படாத

அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கப்பட்டதான தேதி பற்றி அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

மத்திய வங்கி, நெறிவுறுத்தல்கள் முதலியவற்றை வழங்குதல்.

**44.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளைத் தகுந்தமுறையிலும் திறமையாகவும் செயற்படுத்துவதற்கும், நிருவகிப்பதற்கும், வலுவுறுத்துவதற்கும், குறிப்பாகப் பின்வருவன தொடர்பிலும் மத்திய வங்கி பொதுவான பணிப்புகளையும், நெறிவுறுத்தல்களையும், வழிகாட்டுநெறிகளையும் வழங்குதல் வேண்டும் :-

(அ) அதன் கொடுப்பனவுக் கொள்கையை நிறைவேற்றுதலும் கொடுப்பனவுமுறைமை அபாயத்தைக் கட்டுப்படுத்தலும், கொடுத்துத்தீர்த்தல் நிச்சயத்தன்மையை எய்துதலும் ;

(ஆ) இச்சட்டத்தினால் ஆளப்படும் பிணையங்களைக் கையுதிர்ப்பதற்கான நெறிவுறுத்தல்களின் படிவம் ;

(இ) இச்சட்டத்தினால் ஆளப்படும் பிணையங்களைக் கையுதிர்ப்பதற்கான அறிவுறுத்தல்களை அறிவிப்பதற்கான நியமங்கள் ;

(ஈ) பணக்கொள்கையைத் தகுந்தமுறையிலும் திறமையாகவும் நடாத்தவதற்காக வங்கிகளினாலும் ஏனைய நிதி நிறுவனங்களினாலும் மத்திய வங்கிக்கு வழங்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் புள்ளிவிபரஞ் சார் தகவல் ;

(உ) மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்படும் அல்லது மத்திய வங்கியின் புத்தகங்களிற் பேணப்படும் கணக்குகளின்மூலமான எல்லாக் கொடுப்பனவு கணக்குத் தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகளினதும் கண்காணிப்புக்கு ;

(ஊ) பணச்சேவை வழங்குவோரையும், கொடுப்பனவு முறைமைகளையும் பெயர்குறிக்கப்பட்ட முறைமைகளையும் ஒழுங்குபடுத்துதலும், அவர்களுக்கு அல்லது அவற்றுக்கு உரிமமளித்தலும், அவர்களை அல்லது அவற்றை மேற்பார்வை செய்தலும் ;

(எ) காசோலைகளின் இலத்திரன்முறை முன்வைப்பும் செல்லுபடியான முன்வைப்புக்கான தேவைப்பாடுகள், பெறுகை, காசோலைகளை வைத்திருத்தல் அவ்வாறு முன்வைக்கப்பட்ட காசோலைகளை மதித்தேற்றாது விடுதல் மற்றும் வங்கியாளர்களின் பொறுப்புகள் என்பன உட்பட, தொடர்புபட்ட எல்லாக் கருமங்களும்; அத்துடன்

(ஏ) இச்சட்டத்திற் குறித்துரைக்கப்படும் வேறேதேனும் கருமம்.

ஒழுங்கு விதிகள் முதலியன பிணிப்பனவாதல்.

**45.** (1) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும், இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும், விடயத்துக்கேற்ப, ஒவ்வொரு விதியும், நெறிவுறுத்தலும், பணிப்புரையும், பணிப்பும், வழிகாட்டுநெறியும், ஒரு கொடுப்பனவுக் கட்டளையைக் கையாள்வதில் அல்லது ஒரு பிணையத்தைக் கையுதிர்ப்பதில் சம்பந்தப்பட்டுள்ள எல்லாத் திறத்தவர்களையும் பிணிப்பனவாதல் வேண்டுமென்பதுடன், வங்கிகளிடையேயான கணக்குத் தீர்வு விதிகள் ஏனைய உடன்படிக்கைகளும் உட்பட, அவை ஒவ்வாததாகவுள்ள ஏதேனும் உடன்படிக்கை என்பனவற்றை விட ஒவ்வாதனவாகும் அளவுக்கு மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதில், அமைச்சரும் மத்திய வங்கியும் அது இயன்றதாகவுள்ள அளவு வரை, சர்வதேச நியமங்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் இச்சட்டம் மேலோங்கி நிற்றல்.

**46.** கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமை தொடர்பாக வேறேதேனும் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்திற் குறிப்பாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு அல்லாது இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே ஒவ்வாமை இருக்கும் விடயத்தில் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**47.** இச்சட்டத்தின் சிங்கள , தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*